விலை ரூபா: 6.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்பும் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்

பீ.ஜே.பர்னான்டோ

இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 17 சனிக்கிழமை (01.03.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 72

# கேணல் கருணா- ஒஸ்ரின் நேற்று

# மட்டக்களப்பில் சந்தித்துப் பேச்சு!



## முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன

(மட்டக்களப்பு)

அரச தரப்புப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் நேற்று உயர் மட்ட மாநாடு ஒன்று இடம் பெற்றது.

அரச தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தலைமையிலும் புலிகள் தரப்பில் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா தலைமையிலும் இடம்பெற்ற இம் மாநாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவதற்காக கிளிநொச்சியில் யுனிசெவ் உதவியுடன் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை அமைத்தல்

அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவாத்தைக்கு முன்னதாக அரச-புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகள் ஆகிய முத்தரப்பினரின் சந்திப்பு ஒன்றை மட்டக்களப்பில் நடத்துதல்,

தமிழீழ நீதிமன்றக் காவலில் உள்ள இராணுவச் சிப்பாய் மற்றும் பொலிஸ் கான்ஸ்ரபிள் ஆகியோரின் விடுதலை குறித்து கண்காணிப்புக் குழுத தலைவர் வன்னிக்குச் சென்று அரசியல் துறைப் பொறுப்பாளர்

(10ம் பக்கம் பார்க்க)



# மன்னார் மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர்

## சிரான் கூட்டத்தில் முடிவு

(கிளிநொச்சி நிருபர்)

**மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு 5 பேர் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவொன்றை அமைத்து அதன் மூலம் மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல சமூகத்தவரதும் ஆலோசனைகள் பெறப்பட்டு இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதென நேற்றைய சிரான் உப குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யுத்தத்தினால் சீரழிந்து போன ...க்குக் கிழக்கு தமிழர் தாயகப் ...திகளை மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச நாடு...ரின் நிதி உதவியுடன் புனர்நிர்மாணம், புனரமைப்பு வேலைகளை ...ற் கொள்வதற்கான உப குழுக் கூட்டம் ... இரு நாட்களாக நடைபெற்ற போது மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மீள் குடியேற்றத்தினை மதிப்பீடு செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழுவில் ஒரு முஸ்லிம் பிரதிநிதி அடங்கிய இரண்டு அரச தரப்புப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் தரப்பில் இரண்டு பிரதிநிதிகள், யூ.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி ஒருவர் என ஐவர் இடம்பெறுவர் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கிகளின் உதவியுடன் சிரான் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இத் திட்டங்களில் முக்கியமாக பின்வருவன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

✷ முல்லைத்தீவு-மாங்குளம், வெள்ளாங்குளம் ஆகியவற்றுக் கிடையேயான வீதி புனரமைத்தல்.

✷ கிளிநொச்சியில் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான நலன்புரி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்

✷ மன்னார் மாவட்டத்தில நெற் களஞ்சியப்படுத்தும் வசதிகளை புனரமைத்து மேற்கொள்ளுதல்

(10ம் பக்கம் பார்க்க)

## மேஜர் சுந்தரராஜன் காலமானார்

(சென்னை)

புகழ்பூத்த முதுபெரும் தென் இந்தியத் திரைப்பட நடிகர் மேஜர் சுந்தரராஜன் நேற்றுச் சென்னையில்



காலமானார்.

புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர் நேற்றுநண்பகல் 12.30மணியளவில் சென்னையில் உள்ள அவரது வீட்ல் காலமானார்.

நாடகத்துறையில் முத்திரை பதித்த இவர் சிறந்த குணச்சித்திர

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் வாஜ்பாயுடன் பிரதமர் ரணில் சந்திப்பு

(புதுடில்லி)

...று நாள் உத்தியோக பூர்வ ...தை மேற்கொண்டு இந்தியா ...ள்ள பிரதமர் ரணில் விக்கிர...க நேற்று முன்தினமிரவு புது ... போய்ச் சேர்ந்துள்ளார்.

"இந்தியா ருடே'' கருத்த... கலந்து கொள்வதற்காக ...சென்றுள்ள பிரதமர் ரணில் ...ங்கா இந்தியப் பிரதமர் ... பிஹாரிவாஜ்பாயையும் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியையும் நேற்று நணப்பகல் சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சி தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் சென்றுள்ள அமைச்சர் மிலிந்த மொற கொட இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (வ)

## அன்ரன் பாலசிங்கம் நாளை வன்னி வருவார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன பாலசிங்கம் நாளை வன்னிக்கு வருகை தருவார் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

இலண்டனில் இருந்து இன்று நள்ளிரவு இலங்கைக்குப் புறப்படும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அவரது மனைவி அடேல் பாலசிங்கம் ஆகிய இருவரும் நாளை அதிகாலை கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து விஷேட ஹெலிஹொப்டரில் வன்னிக்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐந்தாம் சுற்றுப் பேச்சுவார்த்தை விபரங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நேரில் ஆராய இருக்கும் அன்ரன் பாலசிங்கம் பல இராஜதந்திரப் பேச்சுக்

(10ம் பக்கம் பார்க்க)

## நம்பியாரின் அறிக்கை இன்று கையளிக்கப்படும்

### அமைச்சர் மிலிந்த இந்தியா பயணம்

(கொழும்பு)

...வட பகுதியில் உள்ள இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களை ...கற்றுவது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் இந்திய இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரிடமிருந்து உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கையைப் பெற்றுக் கௌ்வதற்காக பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவுக்கு பயணமாகியுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கை சதீஸ் நம்பியாரால் இன்று கையளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (த-8)

# படையினரை விடுதலை செய்ய புலிகள் நிபந்தனை விதிப்பு


## கேணல் கருணா அறிவிப்பு


(மட்டக்களப்பு)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தான பின் திருகோணமலை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 6 போராளிகளும் விடுதலை செய்யப்படுவார்களே ஆனால் எம்மால் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாயினதும் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரினதும் விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுப்போம் என்று சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலத்தில் இடம் பெற்ற அரசுப் பிரதிநிதிகளினதும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளினதும் சந்திப்பை அடுத்து விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு தமிழீழ நீதி மன்றத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவம் மற்றும் பொலிஸ் ஆகியோரின் விடுதலை தொடர்பாகக் கேட்டபோதே கேணல்

(10ம் பக்கம் பார்க்க)



# CRICKET WORLD CUP 2003




## இன்றைய ஆட்டம்

**கென்யா**
**எதிர்**
**பங்களாதேஷ்**
(ஜொஹனஸ் பார்க்)
2.00 P.M

**பாகிஸ்தான்**
**எதிர்**
**இந்தியா**
(செஞ்சூரியன்)
2.00 P.M



சிம்பாப்வே வீரர் விசாட் ஆட்டமிழக்கும் காட்சி

# அதிவேகப் பந்து வீச்சால் இந்திய அணியைத் திணறடிப்போம்

## பாகிஸ்தான் வீரர் அக்தர் சவால்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் போட்டி இந்தியா-பாகிஸ்தான் மோதல்தான். இந்தியா-பாகிஸ் தான் கிரிக்கெட் போர் இன்று நடைபெறவிருக்கின்றது. இது வெறும் வெற்றி தோல்விக் காக நடக்கும் போர் அல்ல. தன்மானத்தை நிலைநாட்டிக் கொள்ளநடக்கும் போர்.

லீக் போட்டிகளில் கிடைத்த தோல்வியால் துவண்டு போயிருக்கும் பாகிஸ்தான் அணி கூட, இந்தியாவுடனான மோதலில் வெற்றிபெறத் துடித்துக் கொண்டிருக்கின்றது. அணி யின் கப்டனோ, மூத்த வீரர் களோ வாய் திறக்காத நிலை யில் அக்தர் மூலம் இந்தியா வுக்கு பாகிஸ்தான் அணி பகிரங்க சவால் விட்டுள்ளது.

இந்தியா எங்களுக்கு எதிராக நன்றாக விளையாட நினைக்கும். ஆனால் எங்களது அதிவேகப் பந்து வீச்சால் இந்திய அணியை நிலை குலைய வைப்போம். இந்திய வீரர்கள் வேகப் பந்து வீச்சைக் கண்டு பயப்படுவார்கள். அவர்களது பலவீனம் எங்களுக்குத் தெரியும். இவ்வாறு பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளர் அக்தர் இந்திய அணியினருக்குச் சவால் விடுத்துள்ளார்.

இந்திய அணி முழுமைக்குமே நான் குறி வைத்துள்ளேன். ஆனால் சச்சின் டெண்டுல்கர் தான் எனது முக்கிய குறி. டிராவிட் முக்கியமான வீரர். அவருக்கும் நான் குறி வைத்திருக்கிறேன். மிகப் பெரும் வீரர்களுக்கு எதிராக பந்து வீசுவதை நான் விரும்புவேன். அவர்களில் டெண்டுல்கர் ஒருவர். வீரேந்திர சேவாக்கிற்கும் பந்து வீச எனக்கு விருப்பம். செஞ்சூரியன் மைதானம் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானது. இந்திய வீரர்களை இலகுவாக வீழ்த்துவதற்கு என் முழுக் கவனத்தையும் செலுத்து வேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய அணித்தலைவர் கங்குலி கூறுகையில், இங்கிலாந் துடன் கிடைத்த வெற்றி மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் இன்று பாகிஸ்தானுக்கு எதிராக நடை பெறும் போட்டியில் எமது அணி வெற்றி பெற வேண்டும் என்பது என்னுடைய ஆசை. 4 வெற்றிகள் பெற்றதையடுத்து இந்தியாவுக்கு கொஞ்சம் பதற்றம் குறைந் துள்ளது. வலுவான பாகிஸ்தான் அணியை எவ்வித பதற்றமும் இன்றி எதிர்கொள்ள இந்திய விரர்கள் தயாராகியுள்ளனர் என்று கூறினார். (த-5-55)

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### சிம்பாவே எதிர் நெதர்லாந்து

### சிம்பாவே

50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 301 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| விசாட் | c சிமிற்ஸ் | b லிபேவர் | 21 (21) |
| வெர்முலென் | b கொலபன்பார்க் | | 27 (62) |
| அன்ரிபிளவர் | c இஸ்மேஜியர் | b சிபேர்லி | 71 (72) |
| விற்றால் | c ஜுடோரென் | b கொலபன்பார்க் | 30 (37) |
| இப்ராகிம் | b டிலீட் | | 32 (41) |
| பிளக்நற் | c கொலபன்பார்க் | b சிபேர்லி | 58 (38) |
| ஸ்ரிலக் | c இஸ்மேஜியர் | b டிலீட் | 44 (22) |
| மரிலியர் | lbw | b லிபேவர் | 01 (02) |
| ரைபு | not out | | 07 (05) |

உதிரிகள் –10

**பந்து வீச்சு - நெதர்லாந்து**

| | | | |
|---|---|---|---|
| சிபேர்லி | 10 | 43 | 2 |
| லிபேவர் | 08 | 38 | 2 |
| டி.லீட் | 07 | 69 | 2 |
| கொலபன்பார்க் | 10 | 40 | 2 |
| இஸ்மேஜியர் | 09 | 60 | 0 |
| பன்பன்ஜ் | 03 | 22 | 0 |
| மோல் | 03 | 26 | 0 |

### நெதர்லாநது

50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 202 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| கொபெபன்பார்க் | c ஸ்ரீக் | b ஹெண்டோ | 18 (56) |
| சிபேர்லி | b ஸ்ரீக் | | 22 (27) |
| யுடேரன் | Run out | | 15 (31) |
| பன்ஜ் | lbw | b விற்றல் | 37 (47) |
| டிலீற் | lbw | b மூர்பி | 1 (2) |
| ரூஸ்ற் | c ஹெண்டோ | b மூர்பி | 26 (25) |
| ஸ்கூல்ற் | c பிளன்நெற் | b மூர்பி | 7 (26) |
| மூல் | c சாப் | b மரிலியர் | 23 (40) |
| லீபேவர் | b மரிலியர் | | 30 (23) |
| ஸ்மிற்ஸ் | Not out | | 8 (11) |
| இஸ்மேஜியர் | Not out | | 3 (13) |

உதிரிகள் -12

**பந்து வீச்சு - சிம்பாப்வே**

| | | | |
|---|---|---|---|
| பிலிக்நெற் | 10 | 30 | 1 |
| ஸ்ரீக் | 10 | 36 | 1 |
| ஹொண்டோ | 6 | 16 | 1 |
| மூர்பி | 10 | 44 | 3 |
| மரிலியர் | 9 | 49 | 2 |
| விற்றல் | 5 | 19 | 1 |


ஆட்டமிழக்கும் அத்தப்பத்து



அரைச் சதம் குவித்த மகிழ்வில் ஜெயசூரியா

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
**வலம்புரி**
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
**கிரிக்கெற் பரிசுப் போட்டி**
**வலம்புரி**
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விடையுடன் தவறாது
இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ------------------------
முகவரி : ------------------------
------------------------
தே.அ.அ.இல : ------------------------
கையொப்பம்:------------------------
அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# உலங்குவானூர்தி விபத்தில் 23கொலம்பிய வீரர்கள் பலி

(போகோடா)

கொலம்பியாவின் வடபகுதியில் அந்த நாட்டுப் படையினரின் உலங்கு வானூர்தி நேற்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 23 படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

இடதுசாரித் தீவிரவாதிகளுக்கு எதிரான படை நடவடிக்கையின் போது சீரற்ற காலநிலையினால், இந்த உலங்கு வானூர்தி விபத்துக் குள்ளாகியிருப்பதாக கொலம்பிய படைத்தரப்பினர் கூறியுள்ளனர்.

கொலம்பிய தலைநகரான போகொடாவிற்கு வடகிழக்கே 200 கிலோ மீற்றர் தொலைவில் இடம்பெற்ற இந்த விபத்தில் கொல்லப்பட்ட படையினரில் ஒரு கொலம்பிய அதிகாரியும் அடங்குவார்.

கடந்த 13ஆம் திகதி அமெரிக்கப் பிரஜைகள் பயணம் செய்த சிறிய ரக விமானம் ஒன்று இடதுசாரித் தீவிரவாதிகளின் பகுதியில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இதன்போது அதில் பயணம் செய்த 3 அமெரிக்கப் பிரஜைகளை தாம் கடத்தி வைத்திருப்பதாக இடதுசாரித் தீவிரவாதிகள் கூறியிருப்பதைத் தொடர்ந்து, அவர்களைத் தேடும் பணியில் படையினர் ஈடுபட்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இதேரக உலங்கு வானூர்தி ஒன்று கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடதுசாரித்தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 20 இற்கும் மேற்பட்ட கொலம்பிய படையினர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(உ-2)

# வடகொரிய அணுஉலை இயங்க ஆரம்பித்தது

## அமெரிக்கா அவதானிப்பு

(வாஷிங்டன்)

சர்ச்சைக்குரிய அணு உலையை வடகொரியா மீண்டும் இயக்க ஆரம்பித்திருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

வடகொரியாவின் யாங்ஷியாங் அணு உலை இயக்கப்பட்டிருப்பது செய்மதி புகைப்படம் மூலமாக தமக்கு தெரியவந்திருப்பதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இத்தகவலை அடுத்து வடகொரியா மீதான சர்வதேச அழுத்தங்கள் மேலும் அதிகரிக்கக்கூடும் என அரசியல் நோக்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே வடகொரியாவுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி அணு உலைப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருமாறு சீனா,ரஷ்யா ஆகிய நாடுகள் அமெரிக்காவைக் கேட்டுள்ளன.

அணு உலையை இயக்குவது தொடர்பான பிரச்சினையை வடகொரியா பெரிதாக்கி வருவதாகவும் இதன் மூலம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டிய கட்டாயத்தை அமெரிக்காவுக்கு அந்தநாடு உருவாக்கிக் கொடுப்பதாவும் அரசியல் அவதானிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.(உ-2)

## புஷ் மீது அதிருப்தி

# அமெரிக்க இராஜதந்திரி பதவியைத் துறந்தார்

(வாஷிங்டன்)

ஈராக் மீதான புஷ் நிர்வாகத்தின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிரேஷ்ட அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் பதவியை இராஜிநாமாச் செய்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரேஸிலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகரான பிறெடிக்கிஷ்பிங் என்ற இராஜதந்திரியே இவ்வாறு தனது பதவியை இராஜிநாமாச் செய்துள்ளார்.

தனது இராஜிநாமாக் கடிதத்தை அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலுக்கு இவர் அனுப்பி வைத்துள்ளார்.

ஈராக் மீதான ஜனாதிபதி புஷ்ஷின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராஜதந்திரி ஒருவர் தனது பதவியை இராஜிநாமாச் செய்த முதல் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

# அணிசேரா நாடுகள் எவையும் ஆயுதப் பரிசோதனையில் ஈடுபடா

## அமைப்பின் தலைவர் உறுதிபடத் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

அணிசேரா இயக்கத்தின் தலைவர்கள் யாரும் ஆயுதச் சோதனை நடத்துவதற்காக ஈராக் நாட்டுக்குச் செல்ல மாட்டார்கள் என்று மலேஷியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அணிசேரா இயக்க நாடுகளின் மாநாட்டு நிறைவில் அணிசேரா இயக்கத்தின் தலைவரான மலேஷியப் பிரதமர் அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஈராக்கில் ஐ.நா ஆயுதச் சோதனையாளர்கள் ஆயுதச் சோதனை நடத்தி வருவதால் அந்நாட்டில் மேற்கொண்டு ஆயுதச்சோதனை நடத்த அணிசேரா இயக்கத் தலைவர்கள் யாரையும் அனுப்பி வைக்க மாட்டோம்.

ஐ.நா ஆயுதச் சோதனையாளர்களுக்கு ஈராக் ஒத்துழைப்பு வழங்கி வருகிறது என்று அணிசேரா நாடுகள் கருதுகின்றன. அத்துடன் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஈராக்கில் இருக்கின்றதா? என்பதை கண்டறிய ஐ.நா ஆயுதச் சோதனையாளர்கள் தான் தகுதியானவர்கள் மற்றவர்கள் யாரும் ஈராக் செல்ல வேண்டிய அவசியம் இல்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஈராக் மீது அமெரிக்கா போர் நடத்தி அதன் மூலம் ஈராக்கில் சேதங்கள் ஏற்பட்டால் அங்கு புனரமைப்புப் பணிகளை அணிசேரா நாடுகள் மேற்கொள்ளும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(உ-2)

# எதியோப்பியாவில் ஏற்படும் வரட்சியால் இலட்சக்கணக்கானோர் உயிரிழக்கும் அபாயம்

## எச்சரிக்கிறது ஐ.நா உணவுத்திட்டம்

(அடிஸ்அபாபா)

எதியோப்பியாவில் மிக மோசமான வரட்சி ஏற்படலாம் எனவும் இதனால் இலட்சக்கணக்கான மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்க நேரிடும் என்றும் அந்நாட்டுக்கு விஜயம் செய்த ஐ.நா உணவுத் திட்டத்துக்கான அமெரிக்கத் தூதுவர் டோனிகோல் அச்சம் வெளியிட்டுள்ளார்.

இந்த மக்களைப் பட்டினிச்சாவிலிருந்து மீட்கும் பொருட்டு ஐக்கிய நாடுகளின் உணவு நிறுவனங்கள் மனிதாபிமான மற்றும் உணவு உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்று டோனிகோல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் உதவி நிர்வாகி வொஷா வின்ரனுடன் கடந்த மாதம் 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை எதியோப்பியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டபோது அங்கு வரட்சி ஏற்படக்கூடிய நிலை இருப்பது கண்டறியப்பட்டது.

ஏற்கனவே எதியோப்பியாவில் இலட்சக்கணக்கான சிறுவர்கள் போசாக்கு இன்றி அவதியுறும் நிலையில் உள்ளனர்.

இவர்களை இந்த நிலையில் இருந்து பாதுகாப்புடன் வரட்சியில் இருந்து மீட்பது மிகவும் அவசியம் என்றும் உலக நாடுகளிடம் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-2)

# அமெரிக்கத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு

(மொஸ்கோ)

ஈராக்கில் யுத்தம் ஏற்பட வழி வகுக்கும் வகையில் ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள தீர்மானத்தை எதிர்க்கப் போவதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இக்கோல் இவனவ் தெரிவித்துள்ளார்.


ஈராக் பிரச்சினைக்கு நேரடியாகவோ அல்லது வேறு வழிகளிலேயோ இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் பட வழிவகுக்கும் தீர்மானத்தை ரஷ்யா ஆதரிக்காது என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் அங்கு இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்துத் தெரிவித்துள்ளார்.(உ-9)

# போர்த் தவிர்ப்பு முயற்சியில் பாப்பரசர் முனைப்பு

(வத்திக்கான்)

ஈராக்கிற்கு எதிரான போர் நடத்தப்படுவதற்கான தீர்மானம் எடுக்கப்படவுள்ள நிலையில் அதனைத் தவிர்க்கும் பொருட்டு ஸ்பெயின் பிரதமர் ஹொஸ்மரிய அஸ்னாருடன் பரிசுத்தப் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

போரைத் தவிர்ப்பதற்கு தேவையான சகல முயற்சிகளையும் மேற் கொள்ளுமாறு ஸ்பெயின் பிரதமரிடம் பரிசுத்தப் பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பர் வத்திக்கான் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றசந்திப்பின்போது கேட்டுக் கொண்டுள்ளனர்.



இதேவேளை, ஈரான் ஜனாதிபதி முகமட் கடாமியின் சகோதரரும் சபாநாயகருமான முகமட் ரீஷா கடாமியும் பரிசுத்தப்பாப்பரசரைச் சந்திக்க வத்திக்கான் சென்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# ஈராக்கிற்கு எதிரான போரை சவூதி அரேபியா ஆதரிக்காது

## பிரிட்டனுக்கான தூதுவர் தெரிவிப்பு

(ரியாத்)

ஐ.நாவின் 2வது தீர்மானம் நிறைவேற்றப்படாமல் ஈராக்கிற்கு எதிரான அமெரிக்கத் தலைமையிலான போரை சவூதிஅரேபியா ஒருபோதும் ஆதரிக்காது என்று பிரிட்டனுக்கான அந்த நாட்டின் தூதுவர் துருக்அல்பைசல் கூறியுள்ளார்.

ஐ.நாவின் பாதுகாப்புப் பேரவையின் 1441வது சட்ட விதிக்கு ஈராக் கட்டுப்படவில்லை என தெரிவித்து பிரிட்டன்,ஸ்பெயின்,அமெரிக்கா ஆகிய நாடுகள் கடந்த திங்கட்கிழமை புதிய நகல் தீர்மானம் ஒன்றை சமர்ப்பித்துள்ளன.

இதேவேளை, பிரான்ஸ்,ஜேர்மனி, ரஷ்யா என்பன இதற்கு மாறான தீர்மானம் ஒன்றை சமர்ப்பித்திருந்தன.

இதில் ஆயுத பரிசோதகர்களுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப் பட்டிருந்தது.

இந்த நிலையில் தம்மிடம் பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இல்லை என ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் கூறியிருக்கிறார்.

இத்தகைய இழுபறி நிலையிலேயே தூதுவர் அல்பைசல் போருக்காக 2வது தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

(உ-9)

# பெருமளவு ஏவுகணைகளை அழிக்க கொள்கையளவில் இணக்கம்

(சாண்டியாகோ)

ஐ.நா பிரதம ஆயுதப் பரிசோதகர் ஹான்ஸ் பிளிக்ஸின் கோரிக்கையின்படி தம்மிடம் உள்ள பெருமளவு அல்ஷமூத் ஏவுகணைகளை அழிப்பதற்கு ஐ.நா சபையிடம் ஈராக் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் ஆலோசகரானஜெனரல் அமீரல்காடி இது தொடர்பாக அனுப்பியுள்ள கடிதத்தில் அல்ஷாமூத் ஏவுகணைகளை அழிப்பதற்கு கொள்கை அளவில் ஈராக் இணக்கம் தெரிவித்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக ஐ.நா சபை அறிவித்துள்ளது.

ஐ.நாவின் தீர்மானத்தின் படி 150 கிலோ மீற்றருக்கு மேலே செல்லக் கூடிய ஏவுகணைகளை ஈராக் வைத்திருக்க முடியாது எனினும் குறிப்பிட்ட இந்த ஏவுகணை அந்தத் தூரத்தை மீறுவதாக ஆயுதப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஈராக் விடயத்தில் பிளவுபட்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகியவை பொது நிலைப்பாடு ஒன்றிற்கு வரவேண்டும் என்றும் ஐ.நா பாதுகாப்புப் பேரவையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பலம் வாய்ந்த நாடுகளிற்கிடையில் இந்த விவகாரத்தால் ஏற்பட்டுள்ள பிளவைச்சரிக்கட்ட எவரும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் புதிய யோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் அவை ஏற்றுக் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

எனவே இந்த விடயத்தில் அடுத்த நடவடிக்கை என்ன என்பதைத் தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் சிறிய நாடுகள் இருப்பதாக ஐ:நா பேரவைக்கான சிலியின் தூதுவர் தெரிவித்துள்ளார்.(உ-9)

# மசகுஎண்ணெய் விலை கிடுகிடுவென உயர்வு

(வாஷிங்டன)

12 வருடங்களிற்குப் பின்னர் அமெரிக்காவில் மசகு எண்ணெயின் விலை ஒருபோதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது.

ஈராக்கிற்கு எதிரான யுத்தம் எந்த நேரமும் வெடிக்கலாம் என்ற சந்தேகம் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்க எண்ணெய்க் குதங்களின் கையிருப்புக் குறைந்திருப்பதாக வெளியான தகவலை அடுத்து இந்த விலையேற்றம் ஏற்பட்டுள்ளது.

இதன்படி அமெரிக்காவின் மசகு எண்ணெயின் விலை 38 டொலர் 66 சதமாக உயர்ந்துள்ளது.

லண்டனில் ஒரு பீப்பா மசகு எண்ணெயின் விலை 63 சதத்தால் அதிகரிக்கப்பட்டு 33 டொலர் 70 சதமாக விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை, ஈராக்கில் யுத்தம் ஏற்பட்டு ஈராக் எண்ணெய் சந்தைக்கு வராத சந்தர்ப்பத்தில் அதை தம்மால் ஈடுசெய்ய முடியும் என ஒபெக் செயலாளர் நாயகம் கூறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது 1.7 மில்லியன் எண்ணெய் பீப்பாக்களை ஈராக் உற்பத்தி செய்கின்றது. ஒபெக்கினால் ஒரு நாளைக்கு 4 மில்லியன் பீப்பாக்களை உற்பத்தி செய்ய முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ-9)

# இரசாயனக் கழிவுகளுடன் சீனக் கப்பல் வரவில்லை

## ஹக்கீம் மறுப்பு

(கொழும்பு)



சீனக்கப்பல் ஒன்று அபாயகர மான இரசாயனப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கொழும்புத் துறைமுகத்துக்கு வந்தது என்றும், அக்கப்பலில் இருந்து இரசாயனக் கொள்கலன்களை கொழும்புத் துறை முகத்தில் இறக்கிவிட்டு அக்கப்பல் மீண்டும் சீனா சென்றதாகவும் ஊடகங் களில் வெளியான செய்திகளை துறைமுக அபிவிருத்தி கப்பல் துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் முற்றாக நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்,

இந்தக் கொள்கலன்களில் அணு சக்திக் கழிவுகளும், இரசாயனப் பொருட்களும் இருந்தன என்றும், துறைமுகத் தீயணைக்கும் படையி னரின் உத்தரவுகளையும் மீறி, இக்கப்பல் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதற்கு, அனுமதி அளிக்கப்பட்டது எனவும் வெளியான செய்திகள் பொய்யா னவை.

சீனாவில் இருந்து ஈராக் நோக்கிச் சென்றுகொண்டு இருக்கையில் கப்பல் ஒன்றில் தீவிபத்து ஏற்பட்டது.

கடற்பிராந்தியத்தில் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள கப்பல்களுக்கு சகலவித உதவிகளை வழங்குவது சர்வதேச கப்பல் போக்குவரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபாகும்.

இதனடிப்படையில் அந்தச் சீனக் கப்பல் துறைமுகத்துக்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட்டது.

அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் துறைமுக தீயணைப்புப் பிரிவினர் கப்பலைச் சோதனையிட் டுள்ளனர். இதன்போது கொள் கலன்களில் நிரப்பப்பட்டிருந்தது பூச்சி கொல்லிகள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் ஒட்சின் காபனேற் என்ற இரசாயனப் பதார்த்தமே என்பது கண்டறியப்பட்டது.

சர்வதேச கடற்சட்டங்களின் அடிப்ப டையில் இப்பதார்த்தத்தை ஏற்றிக் கொண்டு செல்வது குற்றமற்றது என அவ்அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (உ-8)

# குரு முதல்வராக நியமனம்

(மண்கும்பான்)



யாழ். மறைமாவட்டத்தின் புதிய குரு முதல்வராக மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜே.நீக்கி லாஸ் அடிகளாரை யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நியமித் துள்ளார்.

இந்தியாவின் சென்னை பூந்தமல்லி திரு இருதயக் குருத்துவக் கல்லூ ரியில் தனது குருத்துவக் கற்கை நெறியினை பூர்த்தி செய்த இவர், 1972 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார்.

1986-1987 ஆண்டுப்பகுதியில் ரோமாபுரியில் குருத்துவ மேற் படிப்பை பூர்த்தி செய்த இவர், 1988-1989 பகுதியில் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் உப அதிபராக கடமையாற்றினார்.

1996 ஆம் ஆண்டு முதல் கொழும புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபராகக் கடமை யாற்றி வரும் இவர், யாழ். மறை மாவட்ட குரு முதல்வராக கடந்த வாரம் நியமனம் பெற்றுள்ளார். (உ-55)

# சைவ சமய அறிவுப்பரீட்சை

# செயல்முறைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் பாடசாலை மட்டத்தில் நடத்திய சைவசமய அறிவுப் பரீட்சை, செயல்முறைப்போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல் இன்று பிற்பகல் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

### சைவசமய அறிவுப் பரீட்சை

**தரம் 1**

ஞா.கஜேந்தினி -யா/இந்து ஆரம்ப பாடசாலை
இ.கௌதமி- யா/ இந்து ஆரம்ப பாடசாலை
க.விஷ்ணுகா யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

**தரம் 2**

கே. கௌசிகன்- யா /தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
மோ.சோபிதன்- யா/ இந்து ஆரம்ப பாடசாலை
ஜெ.ஜெசிந்தன்- யா /இந்து ஆரம்ப பாடசாலை
சி.மதூஷன்- யா/ இந்து ஆரம்ப பாடசாலை

**தரம் 3**

ச.சாரூஜன்- யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
சி.அபிராமி- யா/ இந்து ஆரம்ப பாடசாலை
ச.சந்தோசன்- யா/ தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி

**தரம் 4**

பா.சங்கீதா- யா/ நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
வி.வினோத்- யா/ நயினாதீவு ஸ்ரீநாகபூசணிவித்தியாலயம்
பா.ரனுஜன்- யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

**தரம் 5**

ச.டினோஜா- யா/ வேம்படி மகளிர் கல்லூரி
ஜெ.கீர்த்திசா- யா/ வேம்படி மகளிர் கல்லூரி
கு.நிஸாந்தி- யா/ நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

**தரம் 6**

ச. சக்திதாஜினி- யா/ ஸ்கந்தவரோதயக்கல்லூரி
நி.சோனியா- யா/ சன்மார்க்க மகா வித்தியாலயம்
தி. மதுவந்தி- யா/ வேம்படி மகளிர் கல்லூரி

**தரம் 7**

ப.சியாமா- (தங்கப்பதக்கம்) யா/ வேம்படி மகளிர் கல்லூரி
வே. தேவகுமாரி- யா/ கலாநிதி ஆ. தியாகராசா ம.மகா வித்தியாலயம்
க. குகதர்சினி- யா/ கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயம்

**தரம் 8**

ஜெ.சர்மிளா- யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
சோ.நிரூஷிகா- யா/ வேம்படி மகளிர் கல்லூரி
ந.நிசாந்தினி- யா/ வேம்படி மகளிர் கல்லூரி

**தரம் 9**

ந.சுஹிதா- யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
யோ.நிரோஷா- யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
யோ.பிரியசாலினி- யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

**தரம் 10**

இ.சாமினி- யா/ தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி
சி.சுகிர்தா- யா/ வேம்படி மகளிர் கல்லூரி
ப.பத்மநிரூபா- யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்

**தரம் 11**

அ.சிவாஜினி- யா/ வேம்படி மகளிர் கல்லூரி
ந.மதிரேகானா- யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம்
ம.குகரூபன்- யா/ யாழ் மத்திய கல்லூரி
சி.பிரசாத்- கிளி. முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம்
ம.துளசிகா- யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம்

**தரம் 12**

பா.மகியினி- யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
சி.அனோஜா- யா/ இந்து மகளிர் கல்லூரி
த. வனிதா- யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

**தரம் 13**

ச.தாட்சாயினி- யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்
யோ.சங்கீதா- யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்
தி.அனுயந்தி- யா/ நயினாதீவு மகா வித்தியாலயம்

23.02.2003 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செயல்முறைப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறுவோர்.

### கோலம் போடுதல் (மத்திய பிரிவு)

ப.பிரியதர்சினி யா/ வேம்படி மகளிர் கல்லூரி
கோ.நிவாசினி யா/ வண்ணை.நாவலர் மகா வித்தியாலயம்
கோ.நிரோஷன் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி

### மேற்பிரிவு

மோ.விஜிதா 250/2, அரசடி வீதி, கந்தர்மடம்.
ம.சசிகலா 18,துரைராஜா வீதி,யாழ்ப்பாணம்.
ஜெ.கௌரிதேவி யா/ இந்து மகளிர் கல்லூரி

### மாலை கட்டுதல்(மத்திய பிரிவு)

ஜெ.கஜேந்திரன் யா/ கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்
செ.சுரேந்திரன் யா/ கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்
து.வக்சலா யா/ இணுவில் இந்துக் கல்லூரி

### மேற்பிரிவு

க.தயாபதி யா/ புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி
ம.சிறிவாணி யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
ம.துளசிகா யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம்

### தோரணம் பின்னுதல்(மத்திய பிரிவு)

து.கோவிந்தராசன்- யா/ வசாவிளான் மத்தி மகா வித்தியாலயம்
சி.புரந்தரா- யா/ இணுவில் இந்துக் கல்லூரி
சு.பிருந்தாபன்- யா/ வண். நாவலர் மகா வித்தியாலயம்

### மேற்பிரிவு

க.கமலகாந்தன்- சுழிபுரம் கிழக்கு பத்திரகாளி கோவிலடி
ம.தலீபராஜா- யா/ நயினாதீவு மகா வித்தியாலயம்

(நாளை தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 21 வது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்றி வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் மகளிர் இல்லத்தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெற வுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சபாஜெயராஜாவும் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ இரத்தினேஸ் வரக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவஸ்ரீ வ.அகிலேஸ்வரக் குருக்கள், மகாஜ னக் கல்லூரி அதிபர் பொ.சுந்தர லிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள் ளனர். (உ)

## போக்குவரத்துச் சேவை

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சிவராத்திரி தினமான இன்று நடை பெறும் விசேட பூசை வழிபாடுகளில் பக்தர்கள் கலந்து கொள்வதற்கு வசதியா கவும் நாளை மாசி அமாவாசை தினத்தில் ஈழத்துச் சிதம்பர புண்ணிய தீர்த்தமான கசூர்ணா கடற்கரை யில் தீர்த்தமாடுவதற்கு வசதியாக வும் யாழ்ப்பாணத்தில் இருந்து விசேட போக்குவரத்துச் சேவை நடாத்தப் படவுள்ளதாக மேற்படி ஆலய நிர்வாகத் தினர் தெரிவித்துள்ளனர். (உ-246)

## எழுப்புதல் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

''வெற்றி நிச்சயம் விடுதலை சத்தியம்'' என்னும் தொனிப்பொருளி லான எக்காளத்தொனி மாபெரும் எழுப்புதல் கூட்டங்கள் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 5 ஆம் திகதி வரை யாழ். துரையப்பா விளை யாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

தினமும் மாலை 4.30 மணிமுதல் இரவு 8 மணிவரை இக்கூட்டங்கள் இடம்பெறவுள்ளன. (உ)

## நாட்டுக் கூத்து

(யாழ்ப்பாணம்)

திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'கம்பன் மகன்' நாட்டுக் கூத்து இன்றும், நாளையும் மாலை 7மணிக்கு திருமறைக்கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.(உ)

## வீடியோ நாடகம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயல்திறன் அரங்க இயக்கத்தினர் அடியபாதம் வீதி திருநெல்வேலியில் உள்ள தமது காரியாலயத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் ''தேடல்'' என்ற பெயரிலான நாடக வீடியோ படக்காட்சியை நடாத்தவுள்ளனர்.

இத்தொடரில் இன்று சனிக் கிழமை மு.ப. 10 மணிக்கு தே.தேவா னந்தின் ''விழிச்சுடர்'' வீடியோ நாடகக் காட்சி இடம்பெறவுள்ளது. (உ)

## ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும்

(யாழ்ப்பாணம்)

வண்ணைசாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்தி கழகத்தின் 49 வது ஆண்டு விழாவும் சிவராத்திரி விழாவும் இன்று சனிக் கிழமை பி.ப 3 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் இ.விஜயரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/வண்ணை நாவலர் மகா வித்தி யாலய அதிபர் ந.சிவராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரையை பிரம்மஸ்ரீ காசுதனந்த சர்மா நிகழ்த்தவுள்ளார். (உ)

## பௌசர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

லண்டன் வாழ் புங்குடுதீவு நலன் விரும்பிகளினால் வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட குடிநீர் பௌசர் கையளிக்கும் வைபவம் இன்று மு.ப. 10 மணிக்கு வட இலங்கை சர்வோதய சேவை வளாக மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

யாழ். மாவட்ட சிரான் இணைப் பாளர் செ.இரத்தினம் தலைமை யில் இடம்பெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இளைப் பாறிய ஆசிரியர் சிமாணிக்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் புங்குடுதீவு பிரதேசப் பொறுப்பாளர் கானகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர். (உ)

## மத்தியஸ்தர் புத்தாக்க வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இன்று மு.ப. 10 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட் டரங்கில் மத்தியஸ்தர் புத்தாக்க வகுப்பு இடம்பெறவுள்ளது.

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளன மத்தியஸ்தர் போதனாசிரியர் எம்.மூசின் ஆரோன் மேற்படி புத்தாக்க வகுப்பினை நடத்தவுள்ளார். (உ)

# தற்காலிக குடிசை அமைத்தல் திட்டம்

(சில்லாலை)

சிறுவர் பாதுகாப்பு நிதியமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தற்காலிக குடிசை அமைத்தல் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றன.

ஏ-9 பாதையூடாக வந்து மீளக் குடியமர்ந்த விதவைகள் மற்றும் ஊனமுற்றவர்களைக் கொண்ட குடும்பங்கள் இதன் பயனாளிக ளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.


இதேவேளை, இத் திட்டத்தின் கீழ், 10 தற்காலிக குடிசைகள் அமைப்பு பூர்த்தியடைந்துள்ளன. (உ-58)




யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற புதிய நுழைவாயில் திறப்பு விழாவிலும், விளையாட்டுப் போட்டியிலும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட திரு.ந.ரவிராஜ் நாடாவை வெட்டி புதிய நுழைவாயிலைத் திறந்து வைக்கின்றார்.

# திருநெல்வேலி பழங்கிணற்றடி அருள்மிகு
# ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய
# ரதோற்சவ சிறப்பு மலர்
# 01.03.2003







## மஹோற்சவ குருவின் ஆசியுரை:~

''திருவாக்கும் செய்கருமம் கைகூடும்
செஞ்சொற் பெருவார்க்கும் பீடும் பெருக்கும்
ஒருவார்க்கும் ஆதலால் வானோரும்
ஆனைமுகத்தானைக் காதலால் கூப்புவர் தன்னை''

முன்னைப் பரம்பொருளின் மூத்த புதல்வனாகும் திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் வருடாந்த மஹோற்சவத்திற்கு குரு அருளும், திருவருளும் கூடி மிகவும் சிரத்தையுடன் விநாயகப் பெருமானின் திருத்தொண்டே தங்களுக்கு கிடைத்த பெரும் பேறு என நேரம் தவறாத பூஜையும், திருவிழாக்கால ஒழுங்கு தவறாமல் தர்மசிந்தனையுடன் செயற்பட்டு வரும் இளைஞர்கள் மற்றும் சரியை வழிபாடு செய்து வரும் அடியார்கள் எல்லோரும் சிவராத்திரி தினமாகிய இப்புண்ணிய தினத்தில் தேரேறி வலம் வரும் விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகர் அருளால் நாட்டில் நிரந்தர சமாதானமும், சாந்தியும் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ வீரகத்தி விநாயகர் பாதக் கமலங்களை வணங்கி ஆசிகள் பல கூறுகின்றேன்.

ஆலய மஹோற்சவகுரு
சதா-ராஜாஜி


''சீராரும் நான்மறைகள் சிறந்து வாழி!
செப்பரிய ஆகமங்கள் சிறந்து வாழி!''

**ஆறுமுகம் சிற்பாலயம்**
*காளி கோயிலடி,*
*திருநெல்வேலி.*

கயமுகனுக்கு அருள் சுரந்த கருணை போற்றி!
காசினியோர் தமைப்புரக்கும் கருணை போற்றி!

**ஐங்கரன் களஞ்சியம்**
*பல்பொருள் வியாபாரம,*
*பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

காராரும் முகில்வாழி! செங்கோல் வாழி!
கருத்தரிய சிவனடியார் வாழி! வாழி!

**தூஸ் ஸ்ரோர்ஸ்**
*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

ஏத்துவார் முதல்வா போற்றி!
இறைவன் புதல்வா போற்றி!

**ஸ்ரீ கணேஸ்**
**உதிரிப்பாக விற்பனைநிலையம்.**
*பலாலி வீதி.*
*திருநெல்வேலி.*

பேராரும் பூதிமணி அணிவோர் வாழி!
பிஞ்ஞகனார் ஐந்தெழுத்தும் ஆனும் வாழி!

**கலைவாணி அரிசி ஆலை**
*கோண்டாவில.*

பொற்கர மைந்தாய் போற்றி!
புகர்முகக் குன்றே போற்றி!

**குமரன் களஞ்சியம்**
*பல்பொருள் வியாபாரம்.*
*பலாலி வீதி,*
*திருநெல்வேலி*

ஏராரும் நெல்வேலி இனிதே வாழி!
வீரகத்தி விநாயகர் தாள் வாழி! வாழி!

**வேல்முருகன் கபே**
*சைவ உணவகம்,*
*பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

தத்துவ நிலையை தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல்சரணே

**ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்**
*பலாலி வீதி.*
*திருநெல்வேலி.*


கற்பவர் தலைவ போற்றி!
கருதுவோர் கண்ணே போற்றி!

**ராம்கரன் புத்தகசாலை**
*பலாலிவீதி,*
*திருநெல்வேலி.*

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுவிடயத்தில்

# அரசு-புலிகள் எடுக்கும் முடிவுகளை அமெரிக்கா உன்னிப்பாக அவதானிக்கிறது

## ஜோர்ச் புஷ் வெள்ளை மாளிகையில் உரை



(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகளாலும் எடுக்கப்படும் முடிவுகளை அமெரிக்கா உன்னிப்புடன் அவதானித்து வருகிறது.

ஒரு சிறிய நாட்டில் பல பிரச்சினைகள் இருந்து வந்துள்ளன. இருப்பினும் பிரச்சினைகள் நிறைந்த உலகில் ஆக்கபூர்வமான சிந்தனையைக் கொண்டநாடு என இலங்கையை குறிப்பிடமுடியும்

அமெரிக்காவுக்கான புதிய இலங்கைத்தூதுவர் தேவிந்த ஆர் சுபசிங்காவின் நியமனப்பத்திரத்தை வெள்ளை மாளிகையில் ஏற்றுக் கொண்டபின்னர் உரையாற்றும் போது அமெரிக்க ஜனாதிபதி புஷ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி புஷ் தொடர்ந்தும் பேசுகையில்,

கடந்த காலங்களில் அமெரிக்காவும் இலங்கையும் பயங்கரவாத நடவடிக்கையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைக்ள் தறபோது முக்கிய கட்டத்தை அடைந்துள்ளன.அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலகளுக்கும் இடையிலான அடுத்த கட்டப் பேச்சுக்களின் போதுமிக முக்கியமான வியங்கள் ஆராயப்படவுள்ளன.

முக்கிய பேச்சுவார்த்ததைகளின் போது இருதரப்பும் இணக்கப் பாட்டுக்கு வரவேண்டியது அவசியமாகும்.இதற்கு இருதரப்புகள் இடையேயும் திடசித்தமும், துணிவும் விட்டுக்கொடுப்பும் அவசியம். இதற்கு அமெரிக்காவின் பூரண ஆதரவு என்றும் உண்டு.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் இலங்கைக்கான பொருளாதார உதவிகளும் அதிகரிக்கப்படவுள்ளன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கே கூடுதலான நிதியுதவி வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி புஷ்தெரிவித்துள்ளார். (உ-8)

## இணைந்து செயற்பட அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கமும் ஸ்ரீலங்கா உதைபந்தாடடச் சம்மேளனமும் இணைந்து இவ்வாண்டு முதல் பாடசாலைப் போட்டிகளைச் செயற்படுத்துவதற்கு கல்வி அமைச்சுடன் இணைய விளையாட்டுச் சபை அனுமதி வழங்கியுள்ளது. (உ)

## ஊழியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழக எல்லைக் குட்பட்ட வணிக நிலையங்களில் கடமை புரியும் ஊழியர்களுக்கான விஷேட கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3மணிக்கு நவீன சந்தை மேல் மாடிக் கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பல் வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட இருப்பதாகவும் இக் கலந்துரையாடலுக்கு அனைத்து வர்த்தக ஊழியர்களையும் தவறாது சமூகம் தரும்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்-நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் கேட்டுள்ளார்.(த-5)

# நெடுந்தீவுக் கடற்படை முகாமை அகற்றுமாறு ஜனாதிபதிக்குக் கடிதம்

### விநாயகமூர்த்தி எம்.பி. அனுப்பிவைப்பு

(கொழும்பு)

நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகத்தில் அண்மைக் காலத்தில் கடற்படையினரால் முகாம் ஒன்று அமைக்கப் பட்டிருப்பது குறித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தி, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு அவசர கடிதம் ஒன்றினை நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப் பிடப்பட்டிருப்பதாவது,

நெடுந்தீவு பிரதேச சபை அலுவலகத்தில் கடற்படை முகாம் அமைக்கப் பட்டுள்ளது.

இந்த முகாம் , 2002 பெப்ரவரி 22 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின் திறக்கப் பட்டுள்ளது.

இந்த முகாமானது நெடுந்தீவு மக்கள் ஈ.பி.டி.பி.யினரை நெடுந்தீவிலிருந்து வெளியேறக் கோரி சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பித்ததன் பின் திறக்கப்பட்டதாக அறிகிறேன்.

நான் 2003 பெப். 4 ஆம் திகதி நெடுந்தீவுக்குச் சென்று சத்தியாக்கிரகத்தைக் கைவிடும்படி நெடுந்தீவு மக்களைக் கேட்டபொழுது பிரதேச சபை அலுவலகத்திலிருந்து கடற்படையினரை வெளியேற்றித் தருமாறு கேட்டார்கள்.

தற்பொழுது நெடுந்தீவில் கடற்படை முகாம் இருக்கத் தேவையில்லாத காரணத்தால் முகாமை அங்கிருந்து அகற்றுமாறு அரசாங்கத்தைக் கோருவேன் என உறுதியளித்துள்ளேன்.

கடற்படையினரும் ஈ.பி.டி.பியினரும முனபு மக்களுக்கு செய்த செயல்களால் அவர்கள் இருபகுதியினரும் இணைந்து நெடுந்தீவில் இருப்பதை மக்கள் விரும்பவில்லை.

கடற்படையினரை பிரதேச சபை அலுவலகத்திலிருந்து வெளியேறுமாறு கடற்படைத் தளபதியை பணிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவையும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவையும் கேட்டுள்ளேன்.

கடற்படைமுகாம் தங்களுடைய ஆணைப்படி அமைக்கப்பட்டதாக இப்பொழுது அறிகிறேன்.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையொப்பமான பின் அமைக்கப்பட்ட இம் முகாம் தொடர்ந்து இருக்கவேண்டிய தேவை இல்லாமையாலும் நெடுந்தீவு வாழ் மக்கள் கடற்படை அங்கிருப்பதை விரும்பாததாலும் அந்த முகாமை அகற்றுமாறு கடற்படைத்தளபதியை பணித்தால் நான் மிகவும் நன்றியுடையவனாவேன் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. (உ)

# மிதிவெடி குறித்து விபரம் தருமாறு வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மிதி வெடி மற்றும் பொறிவெடி அகற்றும் பணிகளை விரைவாக மேற் கொள்ளத்தக்க வகையில் அது குறித்த விபரங்களை தெரிவிக்குமாறு வலி. கிழக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ.ரி.ஞானசேகரவேல் பொது மக்களைக் கேட்டுள்ளார்.

மிதிவெ டி மீட்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் வகையில் அது குறித்த தகவல்களை பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு வழங்கி உதவுமாறு பொது அமைப்புக்களிடமும்,பொது மக்களிடமும்,அவர் வேண்டு கோள்விடுத்துள்ளார்.(இ)

# பிரான்ஸ் மருத்துவக் குழுவின் பணிகள் இனிமேல் இடம் பெறாது

(கொழும்பு)

மன்னார் இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளில் கடமைபுரிந்து வந்த பிரான்ஸ் மருத்துவக் குழுவினர் (எம்.எஸ்.எவ்.)தமது பணிகளை இம்மாத இறுதியுடன் நிறுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளனர் என மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கையினை தொடர்ந்து தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையை அடுத்தே எம். எஸ் எவ்.வின் பணிகளை இடை நிறுத்த திட்டமிட்டுள்ளது.

கடந்த 12 வருடங்களாக விடத்தல்தீவு,பண்டிவிரிச்சான், அடம்பன் போன்ற இடங்களில் இவ் வைத்தியர்கள் ஆற்றிய பணிகள் மூலம் சுமார்30 ஆயிரம் பேர் நன்மை அடைந்துள்ளனர்.

இதன் பணிகள் இடை நிறுத்திக் கொள்ளப்படுமிடத்து மன்னார் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் தொடர்ந்தும் பணி புரிய 10 வைத்தியர்கள் தேவைப்படுவதாகவும் தற்போது அவ்விடங்களில் பணிபுரிய தேவையான வைத்தியர்கள் இல்லை எனவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ் வைத்தியர்களின் பற்றாக் குறையை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச அதிபர் சுகாதார அமைச்சர் பி.தயாரட்னாவைக் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-8)

# நலன்புரிக்குழு யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

கற்பிட்டி பிரதேச செயலக நலன் புரிக்குழு ஒன்று நாளை 2ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இக்குழு குடாநாட்டில் பல் வேறு தரப்புக்களையும் சந்தித்து மக்களின் நலனோம்பு விடயங்கள் குறித்துஆராய்வதுடன், ஆலோசனைகளையும் வழங்கவுள்ளது. இக்குழு தம்மால் இயன்ற உதவிகளையும் யாழ்மக்களுக்கு வழங்கவுள்ளது. (உ-4)

# அதிபருடன் மட்டும் இயங்கும் காரை. ஆரம்பப் பாடசாலை

(காரைநகர்)

காரைநகர் ஊரி பாடசாலையில் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் ஊரிஅண்டரசன் மண்டபத்தில் இயங்கி வருகின்றது.

இப் பாடசாலையில் தரம் 5 வரையான 54 மாணவர்கள் கல்விகற்கும் அதேவேளை, அதிபர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார். ஆசிரியர்கள் எவரும் நியமிக் கப்படவில்லை.

பாடசாலையின் கட்டடங்கள் கூரைகள், அற்ற நிலையில் . இம் மண்டபத்தில் தளபாடமும் அற்ற நிலையில் மாணவர்கள் தரையில் இருந்து கல்வி கற்கின்றனர்.

இப் பாடசாலை நிலை பற்றி அண்மையில் தீவக வடக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீவகக் கல்விப் பணிப்பாளரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை,இந் நிலைமையில் இதே வசதியீனங்களுடன் முன் பள்ளி ஒன்றும் இதே மண்டபத்தில் இயங்குவது குறிப்பிடத்தக்கது.(உ-246)

மிதிவெடியால் பாதிப்புற்றோருக்கு

# சுய முயற்சிக் கடன் வழங்கல் திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தால் மிதிவெடி மற்றும் வெடி பொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுயமுயற்சிக்கடன் வழங்கல் திட்டம் ஒன்று குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் கீழ் முதற் கட்டமாக நல்லூர்,கோப்பாய், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தரமாக [illegible] பாதிப்புற்றவர்களுக்கு தொழில் முகாமைத்துவம்,தொழிலசார் பயிற்சி, தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் உதவி என்பன வழங்கப்படவுள்ளன.

பயனடைய விரும்புபவர்களை இம்மாதம் 3,4,5ஆம் திகதிகளில் காலை 9.மணி முதல் 12 மணிவரை நேரடியாகவந்து தொடர்பு கொள்ளுமாறுகேட்கப்பட்டுள்ளது. (உ)

## சிவராத்திரி நிகழ்வுகள்

(அராலி)

அராலி வடக்கு மயிலிற்புலம் கந்தசாமி ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு இன்று நான்கு சாமப்பூஜையும் நடைபெறவுள்ளது.

* * *

சங்கானை சிங்கபுரம் சாயி சமித்தி இல்லத்தில் சிவராத்திரி தினமான இன்று பஜனை நிகழ்வும் சொற்பொழிவும் மங்கள ஆராதனைகளும் இடம் பெறவுள்ளன. (உ-58)

* * *

(வட்டுக்கோட்டை)

வட்டு. வடக்கு கற்பக விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி தினமான இன்று இரவு நான்கு சாமமும் விசேட அபிஷேகமும் பூஜை வழிபாடுகளும் இடம் பெறவுள்ளன.

* * *

வட்டுக்கோட்டை வீரபத்திரா் சிவன் கோயிலில் விசேட அபிஷேகங்கள் இடம்பெறவுள்ளன. (உ-214)

* * *

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி விழா இன்றிரவு சிறப்பாக நடைபெறும். (உ-3)

* * *

(யாழ்ப்பாணம்)

அராலி ஆகாயக்குளம் விநாயகா தேவஸ்தானத்தில் சிவராத்திரி விரத கால நிகழ்ச்சிகள் இன்று மாலை 5.30 மணிக்கு ஆலய அறங்காவலர் சு. செந்தில்நாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம் பன்றிக்கோட்டுப் பிள்ளையார்ஆலயத்தில்சிவராத்திரி தினமான இன்று விசேடசமய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

* * *

யாழ்ப்பணம் சத்திர ஞானவயிரவர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

* * *

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில சிவராத்திரி விழா,நான்கு சாமப்பூஜை வழிபாடுகளுடன் இன்று இடம் பெறவுள்ளது.

* * *

யாழ்.மடம்வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் சிவராத்திரி தினமான இன்று பி.ப. 6.30 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம் சபரீச ஐயப்பன் ஆலயத்தில் சிவராத்திரி தினமான இன்று மாலை 5மணிக்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

* * *

அரியாலை ஸ்ரீகலைமகள்சனசமூக நிலையம் நடத்தும் மகா சிவராத்திரி விழா இன்று இரவு 9 மணிக்கு சன சமூக நிலையத்தில், நிலையத் தலைவர் செ.செல்வநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

* * *

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி தினமான இன்று விசேட சமய நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

* * *

ஊரெழு-சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை நடத்தும்மகாசிவராத்திரி விழா இன்று இரவு 7.30 மணிக்கு ஊரெழு கணேசாவித்தியாசலையில் து.ஜெகதீஸ்வன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பதில் நிதிவான் மு.திருநாவுக்கரசு கலந்துகொள்ளவுள்ளாா. (உ)

* * *

காரைநகர் ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் தேவஸ்தானத்தில் சிவராத்திரி நாளான இன்று இரவு விசேட கூட்டுப்பிரார்த்தனை வழிபாடும் விசேட சமயசொற்பொழிவும்விசேட பூஜையும் இடம்பெறவுள்ளது.

* * *

காரைநகர் வியாவில் சனசமூக நிலைய ஏற்பாட்டில் வியாவில் ஐயனார் ஆலயத்தில் இன்று இரவு விசேட பூஜை வழிபாடுகளும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன (உ-246)

* * *

அளவெட்டி கும்பழாவளை பிளளையார்கோவிலில் சிவராத்திரி விழா வழமைபோல் இன்று சிறப்பாக நடைபெறவுள்ளது. (உ-83)

* * *

(வவுனியா)

வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரத்தில் சிவராத்திரி தினமான இன்று விசேட சமய நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

# ஈழத்தில் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்படும் காலம் விரைவில் வரும்

ஈழத்தில் சிறந்த கலையம்சங்கள் நிறைந்த தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிக்கும் காலம் விரைவில் வரும். கொழும்பில் இராமநாதன் மகளிர் கல்லூரியில் 4ஆம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த நித்தியவாணி கந்தசாமி என்னும் சிறுமி 'சரோஜா', 'சின்னத்தேவதை' ஆகிய சிங்களப் படங்களில் நடித்தார். இரு படங்களிலும் நடிப்பிற்காக அச்சிறுமிக்கு சர்வதேச விருதுகள் வழங்கப்பட்டன.



நாடகத்திலோ திரைப்படத்திலோ எதுவித தொடர்பும் இல்லாதிருந்த அச் சிறுமியில் மறைந்திருந்த நடிப்புத் திறனை இயக்குநர் சோமரத்தின திஸநாயக்கா கண்டு பிடித்து நடிக்க வைத்தார். நித்தியவாணி போன்ற திறமைசாலிகள் தமிழ் மக்கள் மத்தியில் இனங்காணப்படாது இருக்கிறார்கள். இன்று தமிழ் நாடகங்களையும் திரைப்படம் தயாரிப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளையும் நோக்கும்போதுசிறந்த இயக்குநர்கள்,நடிகர்கள் முதலிய கலைஞர்கள் ஈழத்து தமிழ்த்திரைப்படத் துறைக்கு வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு ஈழத்து தமிழ்த்திரைப் படங்களுக்கு இசையமைத்த இசையமைப்பாளர் திருமலை பத்மநாதன் அவரது இல்லத்தில் இடம் பெற்ற நேர்காணலில் எமக்குத் தெரிவித்தார்.

### நிர்மலா திரைப்படத்தில்

1968ஆம் ஆண்டில் வெளியான நிர்மலா, 'தென்றலும்புயலும்' ஆகிய தமிழ்த்திரைப்படங்களுக்கு பத்மநாதன் இசையமைத்தவர். 'நிர்மலா' படத்தில் முருகையனின் 'கண்மணி ஆடவா' சில்லையூர் செல்வராசனின் 'வா என் காதல் நிலவே' ஆகிய பாடல்கள் ரசிகர்களிடையே பெரும் வரவேற்புப் பெற்று அன்று இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வந்தமை இனிய நினைவு.

பத்மநாதன் கர்நாடக சங்கீதத்தையும் மேல் நாட்டு சங்கீதத்தையும் கற்றவர். இலங்கை வானொலியில் 'சந்தன மேடை' பகுதியில் இசை நிகழ்ச்சியை நடத்தி இசைப்பிரியர்களைக் கவர்ந்தவர். திருமலை இசைக் கழகத்தை நிறுவி இசை நண்பர்களுடன் நாட்டின் பல பாகங்களிலும் இசை விருந்தளித்தவர். கொழும்பில் அவரின் இசை நிகழ்ச்சிக்குச் சென்ற 'நிர்மலா' திரைப்பட நடிகர் நவாலியூர் ஏ.இரகுநாதன் மூலம் அவர் திரைப்பட இசையமைப்பாளராக நிர்மலாவில் அறிமுகம் செய்யப்பட்டார்.

### நல்ல கலைக்கு வரவேற்புண்டு

இன்று பெரும்பாலான மக்கள் தமது இல்லங்களில் தொலைக் காட்சி,டெக் இவற்றின் மூலம் படங்களையும் நாடகங்களையும் பார்த்து வருகிறார்கள். அதேவேளை இறக்குமதியாகும் திரைப்படங்கள் படமாளிகைகளில் திரையிடப்படுகின்றன. மினி தியேட்டர்கள் வேறு.இவற்றின் மத்தியில் நமது நாட்டில் தமிழ்த் திரைப்படங்களைத் தயாரித்தால் பண ரீதியாக வெற்றிபெறமுடியுமா என்ற கேள்வியை அவரை நோக்கித்தொடுத்தேன்.

அதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார். நல்ல கலை என்றால் மக்கள எந்தத்தடையையும் மீறி வரவேற்பார்கள். இப்போது இலங்கை தொலைக் காட்சி அலை வரிசைகளில் தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யபபட்ட தொடர் நாடகங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. பெரும்பாலான நாடகங்களில் பெண்கள் அசடுகளாகவும வில்லன், வில்லிகளின் சூழ்ச்சிகளுக்கு ஆளாகி ஒன்றும் செய யத் தெரியாமல் மூடக்கொள் கைகளில் மூழ் கி கண் ணீர் வடித் துக் கொண் டிருப் பவர் களாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரும்பாலான தமிழ்த்திரைப்படக் கதைகளைப் போலவே அந்த நாடகங் களின் கதைகளும் யதார்த்தமான வையாக இல்லை. உப்புச்சப்பற்ற தொடர் நாடகங்களாக அவை நீட்டி வளர்க்கப்படுகின்றன.

### நடைமுறை வாழ்வு

ஈழத்தில் தமிழில் நாடகமோ திரைப் படமோ தயாரிக்கும் போது அவற்றில் எமது நடை முறை வாழ்க்கை சித்திரிக்கப்படவேண்டும். எமது அவலம் சூழ்ந்த வாழ்வின் குரல்கள் அவற்றில் எதிரொலிக்க வேண்டும். மக்கள் தமது அவலங்கள் கலையாக மலர்ந்து வரும் போது நிச்சயமாக அவற்றைப் பார்ப்பார்கள். அதன் மூலம் அவர்களது சிந்தனைக்கு விழிப்பூட்டும் செய்தி உணர்த்தப்படும்.

இங்கு நாம்கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் தமிழ் நாட்டில் இருந்துஇறக்குமதியாகும் தமிழ்ப் படங்களைப் பின்பற்றி படங்களைத் தயாரிக்கும் எண்ணத்தை அடியோடு கை விட வேண்டும். இந்த முயற்சி தான் நிச்சயம் பணரீதியாகவும்,கலை ரீதியாகவும் தோல்வியைத் தரும்.

### இசையமைப்பு

திரைப்பட இசை அமைப்பு பற்றி இவ்வாறு அவர் தெரிவித்தார்.

படப்பிடிப்பும்,இசையும் திரைப் படத்திற்கு கண்கள் போன்றவை. பாடல்களுக்கு இசையமைப்பதோடு இசையமைப்பாளரின் பணி பூரணமடைந்து விடாது.

ஓர் இசையமைப்பாளன் திரைக் கதை நிகழ்வுகளின் தன்மைகளையும் பாத்திரங்களின் குணாம்சங்களையும் நன்கு விளங்கிக்கொண்டு அவைகளின் உணர்வுகளுக்கேற்ற பின்னணி இசையினை வழங்க வேண்டும். அதன் மூலம் கதையில் பின்னப்பட்டிருக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்பினை ரசிகர்களின் மனதில் ஆழமாக உணர்த்தலாம்.

### சத்தியஜித்ரே

இயக்குநர் மேதை சத்திய ஜித்ரே தனது படங்களுக்கு சித்தார் மேதை ரவிசங்கரை இசையமைப்பாளராக அமர்த்தினார். எனினும் படத்தின் காட்சிகளுக்கேற்ற இசைக்கான ஆலோசனைகளை சத்திய ஜித்ரே அவருககு வழங்கி நெறிப்படுத்தினார். சில படங்களுக்கு தானே இசையமைத்து திருப்தி கண்டார் அந்த மேதை.

எனவே ஒரு திரைப்படத்தின் கலாபூர்வமான வெற்றிக்கு பாடல்களும் பின்னணி இசையும் எத்தகைய சிறப்பிடத்தை பெற்றிருக்கின்றன என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இன்று திரைக்கதை பற்றி அக்கறை காட்டப்படாது பெரும்பாலான தமிழ்த் திரைப்படங்கள் தமிழ் நாட்டில் வேகமாகத் தயாரிக்கப்படுகின்றன. இதில் வர்த்தக நோக்கு குறுக்கு வழிகளில் ஓடி திரைப்படத்துறையையும் தமிழ்ப் பண்பாட்டையும் கொச்சை படுத்துகின்றது.

### உணர்வுகளுக்குகேற்ற நுட்பமான இசை

இசையமைப்பாளர் தமது வித்துவத்தைத் திணிக்கும் இயந்திர முயற்சியில் இசையமைக்கிறார்கள். இந்நிலையில் கதையின் உணர்வுகளுக்



'நிர்மலா' திரைப்படத்தில் சந்திரகலாவும் ஏ.ரகுநாதனும்

கேற்ற நுட்பமான பின்னணி இசை தமிழ்ப்படங்களில் குறைவு என்று தான் சொல்ல வேண்டும். கதையே இல்லாது பெரும்பாலான படங்கள் தயாரிக்கப்படும்போது இசையமைப்பாளர் பொருத்தமான பின்னணி இசை யினை வழங்கு வதற்கு அக்கறை எடுக்க வாய்ப்பும் இல்லை.

இதேவேளை,பாலுமகேந்திரா,மணி இரத்தினம்,மகேந்திரன் என்று குறிப் பிடத்தக்க சிலர் கதையம் சமுள்ள சில நல்ல படங்களைத் தயாரித்து இருக் கிறார்கள். பின்னணி இசையிலும் கவனம் எடுத்து இருக் கிறார்கள் எனபதை மறுக்கமுடியாது. அது போல சில படங்களில் இனிமையான பாடல்களையும் கேட்கக்கூடியதாக உள்ளன. எனினும் அவை காலத்தால் அழியா தவையாக நிலைத்து நிற்பது அரிதாக உள்ளது.

அக்காலத்தில் எம்.கே.தியாகராஜா பாகவதர் பாடிய திரைப்படப் பாடல்கள் இன்றும் கேட்டு இரசிக்கக் கூடியவையாக உள்ளன. சுத்தமான கர்நாடக இசையை எல்லோரும் இரசிக்கும் விதத்தில் சுவை கெடாது ஜன ரஞ்சகப்படுத்தி அப் பாடல்கள் மூலம் அக்காலத்தில் இசையமைப்பாளர்கள் இசை உலகை வளம் படுத்தினார்கள். அதே பாணியிலான பாடல்கள் இன்றைய திரைப்படத்தின் வெவ்வேறு துறையின் வளர்ச்சிகளோடு பொருந்தாது.

### கர்நாடக இசையின் அடிப்படையில்

ஆனால் கர்நாடக இசையை அடித்தளமாக வைத்து நவீன இசைக் கருவிகளை பக்கவாத்தியங்களாகக் கொண்டு புதுமையான முறையில் திரைப்பட வளர்ச்சிக்கேற்ற விதத்தில் கி.ஆர்.சுப்பராமன், ஜி.இராமநாதன். கே.வி. மகாதேவன், விஸ்வநாதன் ராமமூர்த்தி ஆகிய குறிப் பிடத்தக்க இசையமைப்பாளர் இனிமையான பாடல்களைத்தந்திருக் கிறார்கள்.

தேவதாஸ்,லைலா மஜ்னு, பானுமதி தயாரித்த காதல் ,பாதாள பைரவி முதலிய படங்களின் பாடல் களை இன்று கேட் டாலும் தெவிட்டா மல் இனிக்கின்றன. அப்பப்பாடல்கள் இற்றைக்கு ஏறத்தாழ 45 வருடங்களுக்கு முற் பட்டவை. எதிர் காலத்திலும் அப் பாடல் சுவை குன் றாமல் ஒலிக்கும். அப் பாடல்கள் பெரும் பாலும் கர்நாடக இசையை வைத்து புதிய மெருகூட்டி இசையமைக்கப்பட்டவை

தேவதாஸ்,லைலா மஜ்னு,காதல் முதலிய வெற்றிப்படங்களுக்கு இசை அமைத்த கி.ஆர்.சுப்பராமன் ஓர் இசைமேதை. நான் முன்பு குறிப்பிட்டது போல் நல்ல இசையமைப்பில் அமைந்த பாடல் களும்,சிறந்த பின் னணி இசையும் கலாபூர்வமான ஒரு படத்தின் வெற்றியில் சிறப் பிடம் வகிக்கிறது என்பதை 'தேவதாஸ்' படம் மூலம் அறியலாம்.

**திரைப்பட இசையமைப்பாளர் திருமலை [..]மநாதனுடனான செவ்வி**

### கல்யாணி இராகம்

கல்யாணி மங்களகரமான இராகம். ஆனால் தேவதாஸ் படத்திற்கு கல்யாணி இராகத்தில் சோகப் பாட்டிற்கு இசை யமைத்துக்காட்டுகிறேன்.கேட்டுப்பாருங்கள் என்று இசை நண்பர்களுக்கு கூறி விட்டு சுப்பராமன் இசையமைத்தாராம் கல்யாணி இராகததில் இசை யமைக்கப்பட்ட 'துணிந்த பின் மனமே' என்றபாட்டை இப்போது நினைத்தாலும் மனதைச் சோகம் பிழிய இசை ரசம் சொட்டுகிறது.

இதே கல்யாணி இராகத்தை வைத்து கே.வி.மகா தேவன் 'திருவருட் செல்வர்' படத்தில் மன்னன் அரசசபைக்கு வரும் போது மங்கலமாகப் பாடி ஆடுவதாக இடம் பெற்ற 'மன்னவன் வந்தானடி' என்ற பாடலுக்கு அருமையாக இசையமைத்துள்ளார். பி.சுசிலா தான் பாடிய பாடல்களுள் இந்தப்பாட்டுத்தான் தனக்கு மிகவும் படித்தது என்று ஒரு நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

கி. ஆர்.சுப்பராமன்,கே.வி. மகாதேவன்,சங்கர்ஜெய்கிஷன (ஹிந்தி)ஆகிய இசையமைப்பாளர்களும், முகமட் ரபி (ஹிந்தி) பாடகரும் என் இதயத்தில் இடம் பெற்றிருக்கும் இசையுலக மேதைகள்.

*செவ்வி கண்டவர் :–கபிலா*

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித்தொடரில் ரஞ்சித் தாஸ் (Ranjit Das) இலக்கிய ஒரிய மொழிப்படமான SANSKAR (சந்ததி),மஞ்சும் பன்டா பங்கு பற்றிய ஒடிசி நாட்டியப்படம் ஆகியன நாளைஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியலதுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளன.

ஆர்வலகர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் எனபுறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## கொமிசியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்புனித மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் நாளை 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். மறைக்கல்வி ஒன்று கூடல் மண்டபத்தில் சகோதரர் எம்.ஏ.பிரகாசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## நிர்வாகிகள் தெரிவு

(மண்கும்பான்)

யாழ். பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் நடப்பாண்டிற்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்ற போது, தலைவராக மு.தனேந்திரன், செயலாளர்களாக சஞ்சீவன்நாத் க.தர்மினி, உப தலைவராக ஸ்ரீமகேஸ்வரன், பொருளாளராக தொம்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-55)

## மலசலகூடங்கள் சீரில்லை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நவீன சந்தையின் பின்பக்கம் அமைக்கப்பட்டுள்ள மலசல கூடங்களைப் பாவிக்க மக்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்

உரிய வகையில் சுத்தம் பேணப் படாது, கதவுகள் இன்றியும் அவை காணப்படுவதாலேயே இந்த நிலை ஏறபட்டுள்ளது. (உ)

## உப்பட்டிகள் திருட்டு

(நெல்லியடி)

வயலில் வெட்டிவைத்த உப்பட்டிகளை திருடர் கூட்டம் கையாடிய சம்பவம் அண்மையில் கரவெட்டி தெற்கில் உள்ள க.கணேசராசா என்பவரது வயலில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறானசம்பவங்கள் அடிக்கடி இப்பகுதியில் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-44)

## தபால்மூல வாக்களிப்பு ஆரம்பம்

(கொழும்பு)

அக்குரசைபிரதேசசபை தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இத்தேர்தலுக்கு தபால்மூலம் வாக்களிக்க 634 பேர் தகுதி பெற்றுள்ளனர் என அக்குரசை பிரதேச சபை தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி ஜி.எல்.எதிர்வீர தெரிவித்துள்ளார்.

இப்பிரதேச சபைக்கான தேர்தல் அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (உ-8)

## கைதியைத் தாக்கினராம் காவலர்கள் பணி நிறுத்தம்

(கொழும்பு)

சிறைக்கைதிகள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின்பேரில் சிறைச் சாலைப்பாதுகாவலர்கள் இருவர், அவர்களது சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் பணிப்புரையின் பேரில் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

நீதிமன்றத்தை அவமதித்தார்என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவருட கால சிறைத்தண்டனை விதிக்கப் பட்ட சிறைக்கைதி மீது இவ்விரு காவலர்களும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்

சிகிச்சை அளிக்கவென வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்ட சமயம் சிறைச்சாலை வாகனத்தில் இந்தக் கைதி ஏறுவதற்கு மறுத்ததைத் தொடர்ந்தே பாதுகாவலாகள் மேற்படி கைதியை தாக்கினர் என்பது தெரியவந்துள்ளது.(உ-8)

## முதலீட்டாளர்களுக்கு அரசு வரிச்சலுகைவழங்கும்

(கொழும்பு)

வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய 2கோடிரூபா செலவில் வர்த்தகத்தை ஆரம்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு இரு வருடகால வருமான வரி விலக்கழிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் முதலீட்டை ஆரம்பிப்பவர்களுக்கு இச் சலுகை வழங்கப்படவுள்ளது.

இதற்கானதீர்மானம் கடந்த புதன் கிழமை நடைபெற்ற அமைச்சரவை மாநாட்டில் எடுக்கப்பட்டது. (உ-8)

## மன்னாருக்கு முன்னுரிமை

(கொழும்பு)

உலக நாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி உதவிகளில் முதற்கட்டமாக மன்னார் மாவட்ட மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்புக்கான உப குழுக்கூட்டத்தின் இரண்டாம் நாள் கூட்டத்தின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (உ-8)

## இன்று ஒரு தகவல்

### இடத்தின் மகிமை

பார்த்தசாரதி என்றால் என்ன அர்த்தம்? பார்த்தனுக்கு சாரதி. அதாவது அர்ஜுனனுக்கு தேர் ஓட்டியவன் அது கண்ணன். இது எமக்குத் தெரியும்.

இந்தக் கண்ணன் அர்ஜுனனுக்கு இரண்டாவது பார்த்தசாரதி தான். அப்படியென்றால் முதல் பார்த்தசாரதி என்று ஒருவர் உண்டா? உண்டு! கண்ணனுக்கு முன்னர் அர்ஜுனனுக்கு தேர் ஓட்டியவன் ஒருத்தன் உண்டு. அவன் யார் என்றால்... உத்தரகுமாரன் விராட தேசத்து இளவரசன்.

பஞ்ச பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த நேரம். அவர்கள் விராட நகரத்தில் இருப்பார்கள் என்று துரியோதனன் யூகிக்கிறான். அவர்களை வெளிப்படுத்துவதற்காக சில முயற்சிகள் செய்கிறான். தன்னுடைய சேனைகளை எல்லாம் அழைத்துப் போய் அந்த நாட்டிலுள்ள பசுக்கள் எல்லாவற்றையும் கொண்டு செல்கின்றான்.

அந்த நேரம் விராடன் வேறு ஓர் திசையில் போர் செய்வதற்காகப் போயிருந்தான். அவனுடைய மகன் உத்தரகுமாரன் ரொம்ப பயந்தவன். கத்தியைப் பார்த்தாலே பயப்படுபவன். அவன் எங்கே சண்டை போடுறது. இருந்தாலும் வேறு வழியில்லை. அப்பா ஒரு பக்கம் போய் விட்டார். இவன் இன்னொரு போர் முனைக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலை.

இச்சமயத்தில் அங்கே இருந்த அர்ஜுனன் இவனுக்கு உதவி செய்ய வருகின்றான்.

அர்ஜுனன் தன்னுடைய உருவத்தை மாற்றுகிறான். உத்தர குமாரன் மாதிரி... அதாவது பேடி உருவத்தில் இருக்கும் அர்ஜுனன் அவனுக்கு சாரதியாக அமைகிறான்.

போர் முனையில் உத்தரகுமாரன் தேர் ஓட்டுகிறான். அர்ஜுனன் கௌரவ சேனைகளை விரட்டுகிறான். அவர்கள் எல்லாம் புறமுதுகிட்டு ஓடுகிறார்கள். அதற்குப்பின் ஊருக்குத் திரும்பும்போது அர்ஜுனன் மறுபடியும் பேடி உருவம் எடுத்து தேர் ஓட்டி வருகிறான். உத்தர குமாரன் தேரில் உட்கார்ந்திருந்தான்.

பார்ப்பவர்கள் எல்லோரும் உத்தரகுமாரனே கௌரவர்களை முறியடித்துவிட்டு வருகிறான் என நினைத்து அவனை பாராட்டுகிறார்கள்.

அர்ஜுனனும் தான் சண்டையிட்ட விடயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம்... அந்த இரகசியம் நமக்குள்ளே இருக்கட்டும் என உத்தரகுமாரனிடம் சொல்கிறான்.

கத்தியைக் கண்டாலே பயப்படும் உத்தரகுமாரனுக்கு போரில் வென்றான் என்ற பேரும் புகழும் எப்படி வந்தது? அதுதான் அந்த ஸ்தானத்தின் மகிமை. அதாவது இடத்தின் மகிமை. உத்தர குமாரன் சிறிது நேரம் உட்கார்ந்து தேர் ஓட்டினானே அந்த இடத்தின் மகிமைதான் அவனுக்கு பெருமையைச் சேர்த்துக் கொடுத்தது.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## உடனடி உதவிகள் எவற்றையும் குடாநாட்டிற்கு வழங்க முடியாது

### விளையாட்டுத் துறை அமைச்சர் தெரிவிப்பு

(மண்கும்பான்)

தென்னிலங்கையில் நான் பார்த்திராத வகையில் குடாநாட்டுப் பாடசாலைகள் மிகவும் அமைதியான முறையிலும் ஒழுங்கமைப்புடனும் இயங்குகின்றன.

குடாநாட்டில் உள்ள சில பாடசாலைகளுக்குச் சென்ற போது அவற்றில் நிலவிய அமைதியைக் கண்டு நான் வியந்து போனேன்.

யா/சம்பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ இவ்விதம் தெரிவித்தார்

கல்லூரி அதிபர் வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணப் பூமியில் போர் இடம்பெற்றிராது விட்டால் இங்குள்ள பாடசாலைகளின் வளர்ச்சியை எண்ணிப்பார்க்கவே முடியாதிருந்திருக்கும்.

நிச்சயமாக இந்த மண்ணில் பல முரளிதரன்களும், சுசந்திகாக்களும் உருவாகியிருப்பார்கள்.

எனது அமைச்சுக்கான இவ்வாண்டுத் திட்டங்கள் அனைத்தும் வரையப்பட்டு விட்டதால் என்னால் உடனடி உதவிகள் எவற்றையும் இங்கு வழங்க முடியாதிருக்கின்றது.

மற்றவர்களைப் போல் செய்ய முடியாதவற்றைச் சொல்ல நான் விரும்பவில்லை.

இருப்பினும், இப்பாடசாலை மைதானத்தை



இன்னும் இரு ஆண்டுகளில் புனரமைத்து நவீனமயப்படுத்த நான் பாடுபடுவேன் என்று உறுதியளித்தார்.

இந்நிகழ்வில், அமைச்சர் மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், அதி வண. ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-55)

## அதாவுல்லா தலைமையில் அஷ்ரப் காங்கிரஸ் உதயம்

(கொழும்பு)

ஸ்ரீ.ல முஸ்லிம் காங்கிரஸின் போட்டிக் குழுவான அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான குழு அஷ்ரப் காங்கிரஸ் என்னும் பெயரில் புதிய அரசியற் கட்சியொன்றை கடந்த செவ்வாயன்று தொடக்கியுள்ளது.

இதன் தவிசாளராக அமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லா இருப்பார். கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அதாவுல்லா குழுவினர் முஸ்லிம் காங்கிரஸில் எந்தப் பதவியையும் வகிக்கக் கூடாது என்று இடைக்காலத்தடையுத்தரவை வழங்கியுள்ளதையடுத்தே புதிய கட்சியை இவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கு தனியான ஒரு நிர்வாக அலகு பற்றிய உறுதிமொழியை பிரதமரிடமிருந்து பெறும் பொருட்டு வடக்கு-கிழக்கு மாகாணங்களின் சகலமுஸ்லிம் எம்.பிகளிடமிருந்தும் கையொப்பங்களைப் பெறவிருப்பதாகவும் அந்த முயற்சியில் தற்போது ஈடுபட்டிருப்பதாக புதிய கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவராக எஸ்சுபெயர்தீன், பொதுச்செயலாளராக டாக்டர் எம்.ஹப்ரத், உபதலைவர்களாக நூர்தீன் மசூர், மொஹீதீன் அப்துல் காதர், உறுமாலெப்பை, மசூர்மௌலானா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கட்சியின் முதலாவது செய்தியாளர் மாநாடு எதிர்வரும் 3ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, இது வரைகாலமும் ரவூப் ஹக்கீம் பிரிவுக்கு ஆதரவு தெரிவித்து வந்தவரான வன்னி மாவட்ட எம்.பி ராஷீத் பதுர்தீன், தான் எந்தவொரு பிரிவையும் சாராது பாராளுமன்றத்தில் தனியாக செயற்படப்போவதாகத் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக தான் பிரதமர் விக்கிரமசிங்கவுக்கு நேரில் சந்தித்துக் கூறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## இராசி பலன்

**01. 03. 2003**

**(மாசி 17, சனி)**

திரயோதசி காலை 7.37வரை
திருவோணம் மு.ப 9.43வரை
இராகுகாலம் 9.28-10.58
சுபநேரம் 3.28 - 4.58
மகா சிவராத்திரி

**மேடம்**
நல்லமுயற்சி,பிறர்உதவி, பெரியோரால் மதிக்கப்படுதல், கலந்துரையாடல்.

**இடபம்**
புதிய திட்டமிடல்,வீண்பகை,முயற்சி தாமதம், திடீர்பயணம்.

**மிதுனம்**
காரியதடங்கல், எதிர்பாராத பிரச்சினை, தேகநலக்குறைவு, உதவிசெய்தல்.

**கடகம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், நல்ல செல்வாக்கு, வேலைப்பழு, பொருள் சேர்க்கை.

**சிங்கம்**
முயற்சிவிருத்தி,நல்லசெய்தி, குடும்ப மகிழ்ச்சி, பிரயாணநன்மை.

**கன்னி**
உடல்வியாதி, சொத்துக்களால் மனஸ்தாபம்,தொழில் நன்மை, முயற்சி பலிதம்.

**துலாம்**
தன்னம்பிக்கைக்குறைவு,தாய்வழி உறவு, அதிகாரம், ரோகபயம்.

**விருச்சிகம்**
காரியஅனுகூலம், அன்னியர்உதவி, பிரயாணநன்மை,தனவரவு.

**தனுசு**
குடும்பசுகம்,செய்தொழில் விருத்தி, தேவையற்றசெலவு, கற்பனை மிகுதி.

**மகரம்**
நல்லசிந்தை, காரியசித்தி,விருந்துபசாரம்,பிரயாணக்கஷ்டம்.

**கும்பம்**
உறவினர் சந்திப்பு, சுபசெலவு, சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம்.

**மீனம்**
எதிர்பாராத நன்மை, உறவினர் வருகை, காரிய நன்மை, போசனசுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

## நீதி பரிபாலனம் குறித்து ஆராய்ந்து அறிக்கை

(கொழும்பு)

இலங்கை நீதிபதிகள், சட்டத்தரணிகள் ஆகியோரின் சுதந்திரம் சம்பந்தமாகவும், நீதி பரிபாலனம் மற்றும் நீதிபதிகளின் பொறுப்புக்கள் பற்றியும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேடதூதுவர் பரன்குமாரசாமி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார்.

நாட்டின் நீதித்துறை சம்பந்தமாக எவ்வித நடவடிக்கைகளையும் வெளியார்களினால் மேற்கொள்ள முடியாது. இதனால் நீதித்துறையின் முன்னேற்றம் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு சிவில் சமூகத்தினரையே சார்ந்தது என்பதையும்,

இதற்கு உதாரணமாக பிரதம நீதியரசர் சரத்என்சில்வா தனக்கெதிரான வழக்கை விசாரணை செய்து, தீர்ப்பெடுத்து தானே பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டதையும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த நபர் ஒருவருக்கு ஒரு வருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதையும் பரன் குமாரசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

வழக்கின் வாதியாக குறிப்பிடப்பட்ட பிரதம நீதியரசர் அதே வழக்கில் தீர்ப்புக் கூற முடியுமா என்பது சர்ச்சைக்குரிய விடயமென்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## வட-கிழக்கு வர்த்தக நடவடிக்கை விஸ்தரிப்பு

(கொழும்பு)

வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் அதிகரிக்கப்படவுள்ளதாக வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் நிஹால் அபயசேகர தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் தென்பகுதி வர்த்தகர்கள் அண்மையில் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டமையும்,

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, ஏ-9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து தென்பகுதி-வடபகுதி வர்த்தக பரிமாற்றங்கள் அபிவிருத்தி அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தமிழ் மொழி மூல முறைப்பாட்டை அமைச்சர் சமரசிங்க வலியுறுத்து

(கொழும்பு)

சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழர்களின் முறைப்பாடுகளை தமிழிலே பதிவு செய்து முறைப்பாட்டாளர்களின் கையொப்பங்களை பெறுவதுடன், ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் தமிழ்மொழியில் முறைப்பாடுகளை பதிவு செய்யக் கூடிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மனித உரிமைகளுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரும், தொழில் வேலை வாய்ப்பு அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா நகர மண்டபத்தில் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராயும் முகமாக நடத்தப்பட்ட கூட்டத்தில் அமைச்சர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், தமிழர்களின் முறைப்பாடுகள் சிங்கள மொழியில் எழுதப்படுவதால் பல பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன.

இதைத் தவிர்த்துக் கொள்ள தமிழ் பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள்



தமிழில் பதிவு செய்யப்பட வேண்டும்.

சிங்கள மொழியும், தமிழ்மொழியும் தேசிய மொழிகளாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால், அனைத்து அரச காரியாலயங்களிலும் தமிழ் மொழியில் சேவைகள் நடைபெற வேண்டும்.

மாவட்ட நிலையம், பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், தொழில்-திணைக்களம் ஆகியவற்றில் கட்டாயமாக தமிழ்மொழிச் சேவைகள் நடைபெறவேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ-8)

### பெற்றோலிய வள ஆய்வு குறித்த

## சட்டமூலங்களை ஆக்க அரசாங்கம் ஆலோசனை

(கொழும்பு)

பெற்றோலிய வளம் பற்றிய ஆய்வுகளைச் செய்வதற்கு வசதியாக புதிய சட்டமூலமொன்றை ஆக்குவது பற்றி அரசாங்கம் யோசித்து வருகின்றது.

எண்ணெய் ஆய்வுகளில் பிரபலம் பெற்ற அவுஸ்திரேலிய நிறுவனமான ரீ. எஸ்.ஜீ .நோப்பக் நடத்திய ஆரம்ப ஆய்வுகள் எண்ணெய்வளம் இருப்பதற்கான சாத்தியக்கூற்றை வெளிப்படுத்தியுள்ளதாகவும், இந்த நிறுவனம் இதற்கென தனது பணத்தில் பல மில்லியன்களைச் செலவிட்டிருப்பதாகவும் பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மன்னார்க்குடாவில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆய்வுகள் திருப்தியளித்துள்ள நிலையில் விரிவான ஆய்வுகளைச் செய்வதற்கு நிறுவனம் மகிழ்ச்சியுடன் முன்வந்திருக்கின்றது. ஆனால் அதனைச் செய்வதற்கு பாராளுமன்றம் புதிய சட்ட மூலமொன்றை நிறைவேற்ற வேண்டும் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்னுமொரு அவுஸ்திரேலிய நிறுவனம் இலங்கையின் வடமேற்கு, வடகிழக்கு கடற்பரப்பில் ஆய்வுகளை நடத்துவதற்கு முன்வந்துள்ளது. இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 325 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. (உ)

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கனி
–குறள்–

வலம்புரி

## இருதரப்பிலும் விடுதலைவேண்டும்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஆயுதத்துடன் சென்று புலிகளால் கைது செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகிய இருவரும் தமிழீழ நீதிமன்றின் உத்தரவுக்கமைய விளக்க மறியலில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இவ்வாறு விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவச் சிப்பாயையும், பொலிஸ் உத்தியோகத்தரையும் விடுதலை செய்வதில் அரசும், யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவும் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றன.

அரசாங்கத் தரப்பைப் பொறுத்தவரை தமது தரப்பினர் விடுதலைப் புலிகளால் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் போது அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது நியாயமானது. ஆனால், கண்காணிப்புக் குழு இது விடயத்தில் தலையிடும போது அங்கு, நடுநிலையோடு கூடிய நோக்கு தேவையாகிறது.

அதாவது, படைத் தரப்பைச் சேர்ந்த இருவர் தமிழீழ நீதிமன்றின் உத்தரவின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளது போல் இலங்கைச் சிறைச்சாலைகளில் விடுதலைப் புலிப் போராளிகள தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனவே புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படைத் தரப்பினரை விடுவிக்க முயற்சி செய்யும் போது அரசினால் தடுத்து வைக்கப் பட்டுள்ள புலி உறுப்பினர் களையும் விடுதலை செய்ய முயற்சிப்பது கண்காணிப்புக் குழுவின் கடமையாக இருக்கும்.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்படுகின்ற புரிந்துணர்வு மீறல்களை நடுநிலையோடு நின்று கண்காணிக்கும் மிகப் பெரும் பணியை ஆற்றுபவர்கள் கண்காணிப்புக் குழுவினர். எனவே, அவர்களைப் பொறுத்தவரை அரசும், புலிகளும் சமமானவர்கள். அவ்வகையில், அரச படையினர் புலிகளின் காவலில் இருக்கும் போது அவர்களின் விடுதலை பற்றி கண்காணிப்புக் குழு பேச்சுக்களை நடத்துமாயின், அதே போன்று இலங்கைச் சிறைகளில் உள்ள புலிப் போராளிகளின் விடுதலை குறித்தும் கண்காணிப்புக் குழு ஆக்க பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆக, ஒரு தரப்பின் விடுதலையில் மட்டும் காட்டப்படும் கரிசனை கண்காணிப்புக் குழுவின் நடுநிலையில் ஐயத்தை ஏற்படுத்திவிடும்.

எனவே, தமிழீழ நீதிமன்றின் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவச் சிப்பாய் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோரின் விடுதலையோடு அரச படைகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிப் போராளிகளையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்து அதனை செயலுருப்படுத்தினால் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகள் எதிர் காலத்தில் மேலும் வலுவடைவதற்கு ஏதுவாகும்

# சிவராத்திரி விரத வழிபாடும் பாபநாசத்தீர்த்த மகிமையும்

சைவ சமயத்திலே மிகவும் புராதனமானதும் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மையளிப்பதுதான் சிவ வழிபாடு. இந்த வழிபாட்டிலே ஊனினை உருக்கி உள்ளொளி காண்பதானால் விரத வழிபாடு மேன்மையானது. சிவ விரதங்களிலே உத்தமமானது தான் சிவராத்திரி விரதமாகும் அம்பிகைக்கு ஒன்பது நாட்கள் நவராத்திரி விரதம். ஆனால் சிவனுக்கு ஒரு இரவு மட்டும் சிறப்பாக உடையது. ஒவ்வொரு கல்பங்களிலே ஒவ்வொரு விதமாக சிவன் ஒளிப்



பிளம்பாகத் தோற்றியுள்ளார்.

சிவராத்திரி விரத வழிபாட்டை சிவாலயங்களிலே செய்வது தான் உத்தமோத்தமம். அதிலும் புராதனமான சிவாலயம் என்றால் அனந்த கோடி சிறப்பு, நாயன்மார்கள் சிவனைத தான் வழிபாடு செய்து ஒன்றிணைந்தவர்கள். அதே போல மூவேந்தரும் சிவனுக்குத்தான் கோயில் எழுப்பிவழிபாடு செய்தார்கள்.

### சிவவழிபாட்டின் பெருமை

நாமும் இன்றைய கால கட்டத்திலே சிவவிரத ஆலய வழிபாடு நன்மை தரும் என்று திரிகரண சுத்தியுடன் மனதில்எண்ண வேண்டும்.

இம்மையே தரும் சோறும் கூறையும் என்றும் அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு யாதும் மோர் குறைவில்லையே என்றும் சிவவழிபாட்டின் பெருமையை சுந்தரமூர்த்தி நாயனார் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்.

அபிஷேகப்பிரியன் சிவன், அலங்காரப்பிரியன் விஷ்ணு, நமஸ்காரப்பிரியன் சூரியன் என்பதற்கிணங்க புராதனமாக மூர்த்தி, தலம், தீர்த்தம், ஸ்தலவிருட்சம் பொருந்திய சட்டநாதர் சிவாலயத்திலே மூலமூர்த்தியின் ஆவுடையார் சோழப் பெருமன்னன் காலத்தைப் போன்று சதுர வடிவினதாக உள்ளது. பழம்பெரும் சிவலிங்க மூர்த்தம், நல்லூர் பெருமன்னர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சிவஸ்தலம், ஸ்தல விருட்சமாக வன்னிவிருட்சம்.

### தீர்த்த மஹிமை

தீர்த்தமஹிமை ஏழு ஜென்மங்களிலும் செய்த பாபவிமோசனம் அடைவதாக இருந்தால் தீர்த்தயாத்திரை செய்யவேண்டும். சிவபெருமானை தீர்த்தன் என்று மணிவாசகர் சிறப்பாக குறிப்பிடுகிறார். (''தீர்த்தன் நற்தில்லைச் சிற்றம்பலத்தே'') என்று திருவெம்பாவை கூறுகின்றது. இங்குள்ள தீர்த்தம் ''பாபநாச தீர்த்தம்.'' இந்தியாவிலும் பாபநாசதீர்த்தம் சிறப்பாக உண்டு. இலங்கையில் ''கோயிலும் சுனையும் கடலுடன் சேர்ந்த கோணமாமலை'' தீர்த்தமும் பாபநாச தீர்த்தமாகும். இவ்வாலயத்தில் உள்ள தீர்த்தமும் பாபநாசதீர்த்தம். சுவாமியின் 108 நாமத்திலே ஒன்று பாபவிமோசனர்'' கொடியபாபமாகிய பிரம்மகத்தி தோஷபாபத்தை நிவிர்த்தி செய்பவர் சிவன் ஒருவர் தான். விநாயகர், முருகன், ஸ்ரீராமர் ஆகியோர் தர்மயுத்தம் செய்து பின்பு தோஷநிவிர்த்தியின் பொருட்டு தீர்த்தமாடி சிவவழிபாடு செய்தனர். நாவலர் பெருமான் கூறுகின்றார் இச்சரீரம் நமக்கு கிடைத்தது சிவவழிபாடு செய்து முத்தியின்பம் பெறுவதற்கே. அவர் கூறியபடி நாமும் சிவராத்திரி நன்நாளில் சிவனடியார்கள் திரண்டு வந்து ''சிவாயநம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை'' 'சிவசிவ'' என்னத் தீவினையாளும் என்று திருமூலர் கூறியபடி அரன் நாமமாகிய சிவநாமத்தை நமச்சிவாய வாழ்க என்று கூறியபடி எமது பாபத்தைப்போக்கும் (பாபநாசம்) ''அந்தப்புண்ணிய தீர்த்தத்தை அடியார் கரங்களாலே எடுத்துவந்து அடியார்கள் வழிபாடுசெய்யும் அந்தமஹாலிங்கத்திற்கு அதுவும் இந்த சிவராத்திரிலிங்கோற்பவ காலத்தில் அபிஷேகம் செய்தால் அநந்தகோடி பலன் கிடைக்கும் என்பது ஆகமமுடிவு திரிகரண சுத்தியுடன் இவற்றைச் செய்யும்போது நான்முகன், விஷ்ணு முதலியோரால் காண முடியாத சுவாமி எமக்காக நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி'' எம்மை ஆட்கொண்டு, மண்ணில் நலல வணணம வாழவும,இநதிரன, மால், பிரம்மன் முதலிய தேவர்கள் வந்து எதிர்கொண்டு சுவாமியின் திருவடித்தாமரைப்பாதங்களுக்கு எம்மை எல்லாம் கூட்டிச் செல்வார்கள் என்று திருமுறை கூறியுள்ளது.

பிரம்மஸ்ரீ
தாணுவாசுதேவக்குருக்கள்

# இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகளுடனேயே பேச வேண்டும்

## ஸ்ரீ.ல.சு.கட்சி எம்.பி சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் தற்போதைய அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளை வழிநடத்தும் முறை கேள்விக்குரியதாக உள்ளது என்றும் முன்னாள் அமைச்சரும் தற்போதைய எம்.பியுமான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அரசின் சமாதான முயற்சி தொடர்பாகவும், ஜே.வி.பியுடன் கூட்டு வைப்பது தொடர்பாகவும் கலாநிதி சரத் அமுனுகம கருத்துத் தெரிவிக்கையில்;

ஜே.வி.பியுடன் கூட்டு வைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆவணம் ஒன்றை தயாரித்துள்ளது. இந்த ஆவணம் ஜே.வி.பியிடம் கையளிக்கப் படவுள்ளது. இந்த ஆவணம் இரு கட்சிகளினதும் நிறைவேற்றுக் குழுக்களால் அங்கீகரிக் கப்பட்டதும் இரு கட்சிகளினாலும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

இன்றைய அரசு கடைப்பிடிக்கும பொருளாதாரக் கொள்கையினால் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. இதனால் விவசாயிகள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். ஒரு கிலோ நெல்லு 13.50 சதத்திற்கு குறைவாக விற்க வேண்டாமென அரசு கூறிவருகின்ற போதும் அதற்கு குறைவான விலையிலேயே நெல் விற்பனை செய்யப்படுகிறது என்றும் சரத் அமுனுகம குற்றம் சாட்டியுள்ளார்.

(வ)

## பாடசாலைகள் மேற்பார்வை

(நெடுந்தீவு)

தீவக வலயக் கல்விப் பணிமனைக்கு மேற்பார்வையாளர்கள் குழு ஒன்று கடந்த 25ம் திகதி விஜயம் மேற்கொண்டுள்ளது.

இக்குழு தீவகத்தில் 3 நாட்கள் தங்கியிருந்து சகல பாடசாலைகளையும் மேற்பார்வை செய்த பின்னர் நேற்று திரும்பியுள்ளது.

(உ-126)

## சமூக சீர்திருத்தக் குழு யாழ்.வந்தது.

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையைச் சேர்ந்த பல்வேறு சமூக தொண்டர் நிறுவனங்களையும் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்களைக் கொண்ட சமூக சீர்திருத்தக் குழு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தது.

12 பேர் கொண்ட இக்குழு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டதுடன், மக்களைச் சந்தித்து போரின் பாதிப்புக் குறித்து கேட்டறிந்தும் விபரங்களைச் சேகரித்தும் சென்றுள்ளனர். (உ-4)

## இ.செ.சங்கக் குழுவினர் நேற்று யாழ்.வந்தனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தேசிய தலைமைக் காரியாலயத் தலைவர் ஜேகத் அமரசிங்கா, செயலாளர் எஸ்.எச்.நிமல்குமார் ஆகியோர் அடங்கிய செஞ்சிலுவைக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

யாழ்.செஞ்சிலுவைச் சங்க தலைமைப் பணிமனையில் இக் குழுவினர் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

யாழ்.குடாநாட்டில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும், மருத்துவ சேவையை மற்றும் தொண்டர் சேவைகள் குறித்தும் இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

(இ-4,43)

## தினசரி தியானம்

### காலமும்கடவுளும்

காலம் மிக வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கின்றது. ஆகவே ஒவ்வொரு கணத்தையும் கடவுளுடைய வழிபாடு, சேவை இதிலேயே செலவிடு. இறைவனிடத்துத் தீவிர நம்பிக்கை கொள். சாஸ்திரத்தின் சாரத்தைச் சரியாகப் புரிந்து கொள். பிறர் குற்றம் செய்தால் அதனை மன்னித்தல், பொறுமை, சேவை செய்யும் ஆர்வம் முதலிய நற்குணங்களைப் பயிற்சி செய். உண்மையாகவும், தூய்மையாகவும் இரு. இறைவன் மிக அருகே உன் உள்ளத்தில் இருக்கிறார். வீண் பேச்சில் காலத்தை வீணாக்காதே.

சுவாமி சிவானந்தர்

## புலிகளின் பெயரைக் கூறி பணம் வசூல்

# விழிப்பாக இருக்குமாறு மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள சில குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்தி பிரபல வர்த்தகர்களிடம் பணம் சேகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் கருத்துக் கூறுகையில், தமது பெயரைக் கூறி பல இடங்களிலும் இத்தகைய குழுவினர் பணம் வசூலித்து வருவதால் இது விடயத்தில் மக்களை விழிப்பாக இருக்கும்படி கேட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் இடங்களில் இம்மோசடிகள் அதிகரித்து வருவதாகவும், அங்குள்ள வர்த்தகர்கள் பணம் கொடுக்க மறுக்கும் பட்சத்தில் அச்சுறுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (உ-10)

## சபாநாயகருக்கு சுகவீனம்

(கொழும்பு)

சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா சுகவீனம் காரணமாக கொழும்பு தனியார் வைத்திய சாலை ஒன்றில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-8)

# இராமேஸ்வரம்-தலைமன்னார் பாலம் அமைப்பதற்கு முயற்சி

## இந்தியாவில் பிரதமர் ரணில் உரை

(புதுடில்லி)

இலங்கையில் கடந்த 20 வருடகாலமாக நடை பெற்ற இன யுத்தத்திற்கு முடிவு கட்ட இப் பொழுது தான் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். அரசு சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள அதேவேளை பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. இவ் வாறு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா இந்தியா ருடே நடத்திய கருத்தரங்கில் உரையாற்றும் போது கூறியுள்ளார்.

இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றி ரவு ''தாஜ்பலஸ் ஹோட்டலில்'' நடைபெற்ற இந்தியா ருடே கருத்தரங்கில் உரையாற்றினார் அவர் அங்கு தொடர்ந்து உரை யாற்றுகையில் தென்னிந்தியா வுடன் இலங்கை மீக நீண்டகால வர்த்தக உறவைக் கொண்டுள்ளது. இதனை மீண்டும் புதுப்பித்து தென் இந்தியாவுடன் உப வர்த்தக வலயம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளவே இலங்கை விரும்புகி றது.

இலங்கைக்கும்,இந்தியவுக்கு மிடையே இராமேஸ்வரம் தலைமன்னார் பாலம் அமைக்கப் பட்டால் இலங்கை இந்நியா வர்த்தகத்தை சுலபமாக மேற் கொள்ளலாம். இது வரலாற்று உண்மை.

இந்த அடிப்படையிலேயே இராமேஸ்வரம் தலை மன்னார் பாதையை மீண்டும் அமைப்பதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம் என்றும் பிரதமர் ரணில் விக்கிகரம சிங்கா தெரிவித்துள்ளார் (ம)

# முகாம் அமைப்பதில் கடற்படை மும்முரம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் கடற்படையினர் நேற்று முதல் பெருமளவான பனை மரங்களை தறித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தறிக்கபட்ட பனை மரங்கள் உழவு இயந்திரங்களி லும லான்மாஸ்டர்களிலும் ஏற்றப் பட்டு நெடுந்தீவுப் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள இடத்திற்கு அண்மையில் உள்ள பொது மக்களின் வெற்றுக் காணி ஒன் றில் குவிக்கப்படுகிறது.

நெடுந்தீவில் பாரிய கடற்படை முகாம் ஒன்றை அமைக்கும் பொருட்டே கடற்படையினர் இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தாக அஞ்சப்படுகிறது.

நேற்றைய தினம் மட்டும் 20 முதல் 25 வரையான பனை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. த-49

## இலங்கை அணி வென்றது

இலங்கைக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையில் நடைபெற்றபோட்டியில் இலங்கை அணி 6 ஓட்டங்களால் வெற்றி யீட்டியது. இலங்கை அணி6விக் கெட் இழப்பிற்கு 228 ஓட்டங்களையும் மே.இ.தீவுகள் அணி9 விக்கெட்டுகள இழப்பிற்கு 222 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இனந்தெரியாத நபர் பஸ்ஸைக் கடத்தினார்

## கிளிநொச்சியில் பரபரப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ போக்குவரத்து கழகத்திற்குச் சொநதமான பயணிகள் பஸ ஒன்றை இனந்தெரியாத நபர் ஒருவர் கடத்திச்சென்ற பரபரப்பான சம்பவம் நேற்று வன்னியில் இடம் பெற்றது.

புதுக்குடியிருப்பில் நிறுத்தி வைககப்பட்டிருந்த பஸ்ஸை இனந் தெரியாத நபர் ஒருவர் தந்திரமணாக ஓட்டிச்சென்றார்.

இதனையடுத்து தமிழீழ காவல்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்ததை அடுத்து பரந்தனில் பஸ் வழிமறிக்கப் பட்டு மீட்கப்பட்டது. பஸ்ஸை ஓட்டிச்சென்றவரும் காவல் துறையினலரால் கைது செய்யப்பட்டார்.

பஸ் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து புதுக்குடியிருப்பு கிளி நொச்சி,பரந்தன் பகுதிகளில் காவல்துறையினர் சோதனை களை தீவிரப்படுத்தினர்.

இதேவேளை நேற்று நள்ளிரவு கிடைத்த தகவலின் படி பஸ்சைக் கடத்தியவர் சித்த சுவாதீனமற்றவர் என்று தெரிய வருகின்றது. (இ-53)

---

**இடம்பெயர்....**

* அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், சாய்ந்த மருது ஆகிய இடங்களில் உள்ள குளிர் பதன இயந்திரத்தை மீள் அமைத்தல்

* வடக்குக் கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலுமுள்ள தலா எட்டுக் கிராமங்களைத் தெரிவு செய்து உடனடி மீள் குடியேற்றத்திற்கு வழி செய்தல்,

லண்டன் வாழ் புங்குடுதீவு நலன் விரும்பிகளினால்
வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்திற்கு
அன்பளிப்புச் செய்யப்பட்ட
குடிநீர் பௌசர்
கையளிக்கும் வைபவம்
இடம் : வட இலங்கை சர்வோதய சேவை வளாக மண்டபம்

## வடக்குக் கிழக்கு மாகாணத்தில்

# நிதிப்பரிமாற்றம் செய்யப்படும் திட்டங்கள் வெளியிடப்பட்டன

(கிளிநொச்சி)

உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்புத் தேவைகளுக்கான உபகுழுவும்,உலக வங்கியும் இணைந்து வடக்குக் கிழக்கில் போர்ப்பாதிப்பின் மீள் கட்டு மான நிதியத்திற்கு நிதி பரிமாற்றம் செய்யும் திட்டங்கள் நேற்றைய சிரான் கூட்டத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நேற்று இரண்டாவது நாளாக சிரான் கூட்டம் நடைபெற்ற போது விஷேட உலங்கு வானூர்தி மூலம் உலக வங்கியின் முதன்மை அதிகாரி பீற்றர் ஹெரால்ட் முகாமை இயக்குனர் சங்கமன் சாள்ஸ். உலக வங்கி அதிகாரி நரேஸ் துரைசுவாமி ஆகியோர் வருகை தந்தனர். சிரான் கூட்டத்தில் கலந்து கொண்ட இப் பிரதிநிதி களால் வடக்குக் கிழக்குப் போர்ப்பாதிப்பு மீள் கட்டடுமான நிதியத்திற்கு நிதி மாற்றிக் கொடுக்கும் திட்டம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

---

இத் திட்டங்கள் யாவும் சிரான் பணிப்பாளரிடம் இருந்து விளக் கம் பெறப்பட்டு அமுல் செய்யப்ப டவுள்ளது.

இவற்றை விட கிளிநொச்சி மருத்துவ மனையில் உள்ள அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு முல்லைத்தீவு ஆஸ்பத்திரியின் அபிவிருத்தி, கல்மடு நீர்ப்பாசன த்திட்டம், யாழ்மட்டக்களப்பு கிரானில் உள்ள நீர்ப்பாசனத் திட்டம்சகல மாவட்டத்திற்கு மான புனர்வாழ்வு, மீள் குடியேறறத் திட்டங்கள், முல்லைத்தீவு, மன்னார், அம்பாறை மாவட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் தொழில் நுட்பவிருத்தி, கிளி நொச்சியில் பால் உற்பத் தியைச் சந்தைப்படுத்தும் வசதி விஸ்தரிப்பு, முல்லைத்தீவு,

இந் நிதியத்தின் கண்கா கிப்பாளர்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்படுவர் உலக நாடுகளின் இத்திட்ட உதவியை உலக வங்கியும் கண்காணிக்கும்.

இநத நிதியததின் மூலம் நகரம் மற்றும் கிராமங்களில் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ளவும் சிறிய பெரிய அளிவிலான உப திட்டங்களை நிறைவேற்றவும் அடிப்படை சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகள். பெண்களின்,குழந்தைகளின் நலன்கள் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது. (ம)

---

**மேஜர்...**

நடிகர். தமிழ்த் திரைஉலகில் தொடர்ந்தும் தமிழ்த் திரைப்படங்களில் நடித்து வந்த இவர் தெய்வ மகன்,ஞான ஒளி, வசந்தமாளிகை உட்பட பெரு மளவு படங்களில் நடித்தவரா வார்.

திரை உலகின் முன்னணி நட்சத் திரங்களான மறைந்த மக்கள் திலகம் எம்.ஜீ.ஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோருடன் இணைந்து பல படங்களில் நடித்துள்ளார்.

இவரது பூதவுடலுக்கு திரை உலகினர் திரண்டு அஞ்சலி

---

**அன்ரன்...**

களிலும் வன்னியில் ஈடுபடுவார் என்று தெரியவருகிறது.

இரண்டு வாரங்கள் வன்னியில் தங்கியிருக்கத் திட்டமிட்டுள்ள அவர் ஜப்பானில் எதிர்வரும் 18ம் திகதி நடைபெறவுள்ள 5ம் சுற்றுப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்கு வன்னியில் இருந்து ஜப்பானுக்குச் செல்வாரென்றும் தெரிய வருகிறது. (இ)

வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்திற்கு
அன்பளிப்புச் செய்யப்பட்ட

## குடிநீர் பௌசர்

# கையளிக்கும் வைபவம்

இடம் : வட இலங்கை சர்வோதய சேவை வளாக மண்டபம்

காலம் : இன்று(01.03.2003)சனிக்கிழமை காலை 10.00 மணி

தலைவர்: **உயர்திரு. செ.இரத்தினம் அவர்கள்**
(இணைப்பாளர் - சிரான் யாழ் மாவட்டம்)
சிறப்புவிருந்தினர் : **திரு. சி.மாணிக்கம் அவர்கள்**
( இளைப்பாறிய ஆசிரியரும் பெருங்காடு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவரும்)
**திரு. கானகன் அவர்களை**
(பிரதேசப் பொறுப்பாளர் த.வி.பு. புங்குடுதீவு)

* மங்கள விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* தொண்டர் க.திருநாவுக்கரசு அவர்களின் 65வது ஜெயந்தி தினமான இன்று அவரது திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிதலும் அஞ்சலி செலுத்துதலும்
* வரவேற்புரை
* சிறப்புரை
* குடிநீர் பௌசர் கையளிப்பு

கையளிப்பவர் : **திரு. க. தேவதாஸ** அவர்கள்
(கொழும்பு புங்குடுதீவு மக்கள் அபிவிருத்திக் கழக உறுப்பினர்)

பொறுப்பேற்பவர்கள் : **செல்வி க. புஸ்பமணி** அவர்கள்
(நிலையப் பொறுப்பாளர் வட இலங்கை சர்வோதயம்)

**செல்வி பொ. ஜமுனாதேவ'** அவர்கள்
(அறங்காவலர். வட இலங்கை சர்வோதயம்)

நன்றியுரை : **செல்வி க. புஸ்பமணி** அவர்கள்

வட இலங்கை சர்வோதயம்,
புங்குடுதீவு.



விளம்பர அனுசரணை:

# கரசன்ஸ் எலெக்ரிக்கல்ஸ்

14, ஸ்ரான்லி வீதி (C/5815) யாழ்ப்பாணம்


த்திட்டம், யாழ்மட்டக்களப்பு கிரானில் உள்ள நீர்ப்பாசனத் திட்டம்சகல மாவட்டத்திற்குமான புனர்வாழ்வு, மீள் குடியேற்றத் திட்டங்கள், முல்லைத்தீவு, மன்னார், அம்பாறை மாவட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் தொழில் நுட்பவிருத்தி, கிளிநொச்சியில் பால் உற்பத்தியைச் சந்தைப்படுத்தும் வசதி விஸ்தரிப்பு, முல்லைத்தீவு, யாழ் மாவட்டங்களில் குளிர்பதன இயந்திர மீள் அமைப்பு, மற்றும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில் மருத்துவமனை அபிவிருத்தி என்பன போன்ற திட்டங்களும் இதில் அடங்கும் (ம)

## படையினரை...

கருணா அம்மான் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளினால் சமாதானப் பேச்சுவார்த்தையில் தமிழ் மக்கள் அதிருப்தி அடைந்துள்ள தற்போதைய சூழ்நிலைகளில் நேற்றைய சந்திப்பு ஆக்கபூர்வமானதாக அமைந்திருந்தது என்று கூறினார். (ம)

## கேணல் கருணா...

சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்கள் நடத்துதல்,

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையிலும் தொழிற் பயிற்சி நிலையத்தை அமைத்தல்.

வடக்குக் கிழக்கு பொருளாதார அபிவிருத்தி மற்றும் முதலீட்டு வாயப்புக்கள் தொடர்பாக இரு தரப்பும் நடவடிக்கை எடுத்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்பியூறு ஹெவ்டே இம்மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

நான்கு மணிநேரமாக நடைபெற்ற இம்மாநாட்டில் விடுதலைப் புலிகள் தரப்பில் சிறப்புத் தளபதி ரமேஷ், மருத்துவப் பொறுப்பாளர் வாமன்,மூத்த உறுப்பினர் வரதன் ஆகியோரும், அரச தரப்பில் ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.அப்துல் மஜீத் மற்றும் யுனிசெவ் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொண்டனர். (த)

இவர் தெய்வ மகன்,ஞான ஒளி, வசந்தமாளிகை உட்பட பெருமளவு படங்களில் நடித்தவராவார்.

திரை உலகின் முன்னணி நட்சத் திரங்களான மறைந்த மக்கள் திலகம் எம்.ஜீ.ஆர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோருடன் இணைந்து பல படங்களில் நடித்துள்ளார்.

இவரது பூதவுடலுக்கு திரை உலகினர் திரண்டு அஞ்சலி செலுத்துகின்றனர். (இ-5)

களிலும் வன்னியில் ஈடுபடுவார் என்று தெரியவருகிறது.

இரண்டு வாரங்கள் வன்னியில் தங்கியிருக்கத் திட்டமிட்டுள்ள அவர் ஜப்பானில் எதிர்வரும் 18ம் திகதி நடைபெறவுள்ள 5ம் சுற்றுப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்கு வன்னியில் இருந்து ஜப்பானுக்குச் செல்வாரென்றும் தெரியவருகிறது.

(இ)


# MEDICAL CHECK UP
# வைத்திய பரிசோதனை

**நோய் வருமுன் காப்போம்**
**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்**

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள. நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப்பா'சோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

## சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]



எழுந்திரு! விழித்திரு!

# சுவாமி விவேகானந்தர் கண்காட்சி

இடம : வல்வை மகளிர் கல்லூரி
திகதி : 03.03.2003 திங்கட்கிழமை
நேரம : காலை 9.00 மணி

திரு.M.K.சிவாஜிலிங்கம்
(பாராளுமன்ற உறுப்பினர்)
அவர்களால் கண்காட்சி திறந்து வைக்கப்படும்

திருமதி.கு.நகுலாம்பிகை
அதிபர்
வல்வை மகளிர் கல்லூரி

செயலாளர்
ஸ்ரீராமகிருஷ்ணசாரதா
சேவாச்சிரமம்
பருத்தித்துறை

(C/5816)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.